# தேனகம்

2007



இதழ் 15

பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு


# தேனகம்

பதினைந்தாவது ஆண்டு
முத்தமிழ் விழாச்சிறப்பு மலர்

*மண்ணில் எம்கலைகளைக்
கண்ணென மதிப்போம்*

*வெளியீடு:*
பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
2007

## உள்ளே.....



### கட்டுரைகள்


எம்.பி. ரவிச்சந்திரா - 8
சர்மிளா ரஞ்சித்குமார் - 14
ஜீவரெத்தினம் கெனடி - 19
சுந்தரமதி வேதநாயகம் - 25
செல்வராஜா பிரதீபன் - 30
அ.ல. றியலாஸ் - 35
வே. சிறிதரன் - 44
தேவ. அலோசியஸ் - 48
அ. வரப்பிரசாத் - 53
ஜீ. ஸ்ரீநேசன் - 55



### சிறுகதை


39 - கி. கலைமகள்




### கவிதைகள்


அனேந் - 13
புஸ்பராஜா ஷோபா நந்தினி குருஷ் - 18
கி. கலைமகள் - 43

### மற்றும்


வாழ்த்துச்செய்தி
கலைஞர்கள் கௌரவம்
கலாசார கீதம்
போட்டி முடிவுகள்

# மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்



**அமர்ந்திருப்பவர்கள்: (இ.வ)**
திரு. த. மலர்ச்செல்வன் (கலாசார உத்தியோகத்தர்), திரு.கா. க. கணேசானந்தம், திருமதி. கலாமதி பத்மராஜா (பிரதேச செயலாளர்), திரு. ந. விஸ்வரத்தினம் (உதவிப்பிரதேச செயலாளர்), திருமதி. சுந்தரமதி வேதநாயகம், திருமதி. ம. சிவஞான சோதிகுரு.

**நிற்பவர்கள் (இ.வ)**
திருமதி. நிர்மலா ஜெயராஜா, திரு. வி. மைக்கல் கொலின், திரு. சு. நேசதுரை, திரு. எஸ். தில்லைநாதன், திரு. நா. சிவலிங்கேஸ்வரன், திரு. த. ஈஸ்வரராஜா, திரு. எஸ். சந்திரகுமார், திரு. தேவஅலேசியஸ், திரு. கதிர்பாரதிதாசன், செல்வி. பி. சரோஜா.

# தேனகம்

பதினைந்தாவது ஆண்டு
முத்தமிழ் விழாச்சிறப்பு மலர்

மலர்க்குழு:

திரு. கா.க. கணேசானந்தம்
திரு. எஸ். தங்கவேல்
திரு. கதிர் பாரதிதாசன்
திரு. நா. சிவலிங்கேஸ்வரன்
திருமதி. தி. ஹரிதாஸ்
திரு. த. மலர்ச்செல்வன்

அட்டை ஓவியம்:
பா. புஸ்பகாந்தன்

அட்டை வடிவமைப்பு:
வாசன்

ஓவியங்கள்:
பா. புஸ்பகாந்தன்
க. நிஷாந்தன்

வடிவமைப்பு:
த. மலர்ச்செல்வன்

வெளியீடு:
பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
2007

**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**
**மண்முனை வடக்கு — மட்டக்களப்பு**
**2007**

தலைவர்:
திருமதி. கலாமதி பத்மராஜா
பிரதேச செயலாளர்

உபதலைவர்:
திரு. ந. வில்வரத்தினம்
உதவிப் பிரதேச செயலாளர்

செயலாளர்:
திரு. த. மலர்ச்செல்வன்
கலாசார உத்தியோகத்தர்

பேரவை உறுப்பினர்கள்:
திரு. கா.க. கணேசானந்தம்
திரு. எஸ். தங்கவேல்
திருமதி. நிர்மலா ஜெயராஜா
திரு. கதிர் பாரதிதாசன்
திரு. நா. சிவலிங்கேஸ்வரன்
திரு. அ. நேசதுரை
திரு. எஸ். தில்லைநாதன்
திரு. எஸ். சந்திரகுமார்
திரு. சீ. பீ. ஹரிசந்திரன்
திருமதி. ம. சிவஞான சோதிகுரு
திரு. வி. மைக்கல் கொலின்
திருமதி. சுந்தரமதி வேதநாயகம்
திரு. தேவ அலோசியஸ்
திருமதி. தி. ஹரிதாஸ்
திரு. த. ஈஸ்வரராஜா

விடய எழுதுநர்:
செல்வி. பி. சரோஜா



# வாழ்த்துச்செய்தி

மண்முனை வடக்கு கலாசார பேரவையின் முத்தமிழ் விழாவின் முத்தான 15 வது தேனகத்தின் முன்னுரையூடாக உங்களுடன் கதைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மட்டக்களப்பு மாநகரத்தின் கலை, கலாசார பண்பாட்டுக்கு ஒரு தனி இடம் உண்டு. இந்தப் பிரதேசத்து மண்ணின் பண்பாட்டு விழுமியங்களை பரம்பரை பரம்பரையாக பராமரித்துக் கொண்டும், காலச்சக்கரத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களோடும் முற்றுமுழுதாக வளர்ந்துவரும் கலைஞர்களின் படைப்புகளாலும், சிந்தனைச் சிதறல்களாலும் இந்தத் தேனகம் ஆக்கப்பட்டு வெளிவருகின்றது என்பதை பெருமையுடன் அறியத்தருகிறேன்.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட அமைதியின்மையினால் பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் கலை, கலாசார விழுமியங்களை உணர்வு பூர்வமாக விழிப்புணர்வை தேனக மலரும், கலாசார முத்தமிழ் விழாவும் கட்டியெழுப்புகிறதென்றால் அது மிகையாகாது.

இந்த நூலின் ஆக்கத்திற்கும் முத்தமிழ் விழா நடைபெறுவதற்கும் அயராது உழைத்த மண்முனை வடக்கு கலாசாரபேரவை உறுப்பினர்களுக்கும் பிரதேச செயலக சகல தரப்பு உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. கலாமதி பத்மராஜா BSc, SLAS, PGDM
பிரதேச செயலாளரும்
கலாசார பேரவைத் தலைவரும்
பிரதேச செயலகம்
மண்முனை வடக்கு



# வாழ்த்துச்செய்தி

கடந்த பதினைந்து வருடமாக முத்தமிழ்விழாவை நடாத்தி, அதன் ஆவணமாக "தேனகம்" எனும் மலரை வெளியிட்டு வரும் மண்முனைவடக்கு பிரதேசசெயலக கலாசாரப்பேரவையின் செயற்பாடு மகத்தானது.

ஒரு சமூகத்தினுடைய கலை கலாசாரத்தைப் பேணிக் காப்பதில் அந்தந்த பிரதேசசெயலகம் மிக உழைப்புடன் செயற்பட வேண்டியது இன்றைய காலகட்டத்தின் அவசியமாகும்.

இந்தவகையில் மண்முனை வடக்கு பிரதேசசெயலகம் இக்கைங்கரியங்களை ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்துவது மகிழ்ச்சியைத் தருகிறது.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு போட்டிகளும், திறந்த மட்டத்தில் போட்டிகளையும் நடாத்துவதோடு, சிறந்த கலைஞர்கள், இலக்கியவாதிகளைக் கௌரவித்துப் பாராட்டுவதும் சிறப்பைத் தருகிறது.

2007ம் ஆண்டுக்கான முத்தமிழ்விழாவை நடாத்த ஏற்பாடுகள் செய்த கலாசாரப்பேரவையினருக்கும், பிரதேசசெயலாளர் உள்ளிட்ட சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு, முத்தமிழ்விழா இனிது நிறைவுபெறுவதற்கு எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சு. அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
மட்டக்களப்பு

# கலாசார கீதம்

மண்முனை வடக்கு எங்கள்
அன்னைபூமி அன்னைபூமி
எட்டுத்திசை ஒலிக்குமிதன் அழகுதான் - நெஞ்சில்
தொட்டெழுதச் சுரக்கும் கவிதைகள் அமுதுதான்
(மண்முனை)

கடலது முகமுமாகும்
ஆறுகள் கூந்தலாகும்
நிலமது உடலுமான வடிவந்தான் - இது
மட்டுமா நகரினிதய மேடுதான்,
மட்டுறால் மீன்வளமும்
நண்டும் சுவையொட்டியும்
முட்டமடி சுமக்கும் கருவூலந்தான் - எங்கும்
முத்திரைகள் பதித்துவைத்தான் பிரம்மன்தான்
(மண்முனை)

தமிழர் பறங்கியர் முஸ்லிம்
இனங்கள் என மூன்றும்
சமத்துவங் காணவிளையும் பூமிதான் - நின்று
சமரச முயற்சிகாணு வாரெல்லாம்.

அன்பெனும் கொடியதனில்
பல்மதப் பூமலர்ந்து
ஆன்மீக மணங்கமழும் சோலைதான் - இது
இதயங்கள் இணைந்திடும் பூ மாலைதான்
(மண்முனை)

மீனினம் இசைபாடும்
வாவியில் கலமோடும்
வானுயர் கோட்டைநம்மை வியக்கும் - மனம்
கல்லடிப் பாலம் கண்டு மயங்கும்,
பாரம்பரிய இசை
வைத்தியம் விளையாட்டு
சோதிடம் சிற்பமுயிர் தரிக்கும் - மண்ணில்
பழமையும் புதுமையும் உறவாடும்


(மண்முனை)

கல்வியும் கூத்திசையும்
தேனக(ம்) இலக்கியமும்
பல்வளப் பெருக்குமிதன் வேரம்மா - வித்தகன்
விபுலானந்தன் வாழ்ந்த ஊரம்மா,
போர்கள் அழிவுகண்டும்
வீழ்ந்து விடாமலின்னும்
ஊர்வளங் காக்குமெங்கள் தோளம்மா - இங்கு
உழைப்பவர்தானே மண்ணின் வேரம்மா
கரங்குவிப்போம் சேர்த்து - இந்தப்
பூமிக்கெங்கள் வாழ்ந்து - செந்
தமிழைப்போல இளமையொடு
வாழிய பல்லாண்டு

பாடலாக்கம்
- அ.ச. பாய்வா -

# ஈழத்துத் தமிழ் கூத்தரங்கு வளர்ச்சிநிலை - ஒரு நோக்கு

## எம்.பி. ரவிச்சந்திரா



அரங்கு என்பது கற்றுக் கொள்ளும் ஒரு அறிவாக மட்டும் செயல்பட முடியாது. புனைக்கதை கோட்பாடுகள் போன்றவை தொடர்பான விவாதங்களில் கற்றுக் கொள்வது புதிதாக அறிந்துகொள்வது சாத்தியம். ஆனால் அரங்கு அவ்விதம் மட்டும் செயல்படமுடியாது. மண்ணில் இருந்து உருப்பெற வேண்டிய அடிப்படைத் தேவை உள்ளது. மண்ணில் புதைந்துள்ள வேர்களின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் அரங்கக் கலை உருவாக்கத்தில் ஆழமான பங்களிப்புச் செய்ய முடியும். நவீன அறிவாளி உருவாக்கத்தோடு மட்டும் அரங்கு தங்கிப் போவதில்லை. இங்குள்ள வேரின் அனுபவங்கள் நவீன அறிவோடு இணையவேண்டும். நவீன அறிவு மட்டும் போதாது. இதுவே அரங்கின் தனித்தன்மையும் ஆகும். இந்த வகையில் தமிழர்களின் மரபுவழிப்பட்ட கலை அனுபவங்களில் இருந்தும் தமிழ் அரங்கமொழியைப் புரிந்து கொள்ளவேண்டும். அவ்விதம் செயற்படும்போது தமிழ் மக்களின் வாழ்க்கை முரண்பாட்டை அல்லது அவர்களது அரசியலை முன்னெடுக்க முடியும். இவ்வகைச் செயற்பாட்டைத் தமிழ் அரங்காகவும் தமிழ் அரங்க அரசியலாகவும் புரிந்து கொள்ள வேண்டும். இதுமட்டுமன்றி பிறசெயற்பாடுகளையும் இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும்.

அரங்கு என்பது ஈழத்துச் சூழலில் பார்சி அரங்கப் போக்கும், இசைநாடக மரபும், இயற்பண்பு அரங்கும் ஆதிக்கம் செலுத்திய காலம் அதில் அர்ப்பணிப்பு முயற்சிகளும்

உண்டு. இக்கால கட்டத்தில் ஐரோப்பிய தொடர்பின் ஊடாக உருவான நாடக முயற்சிகளும் உண்டு. இம்முயற்சிகள் தமிழ் அரங்கு வடிவம் பெறவில்லை. மாறாகத் தமிழறிஞர் மத்தியில் சரச்சந்திராவின் மனமே நாடகம் ஏற்படுத்தி பாதிப்பும் அக்காலச் சூழலில் ஏற்பட்ட தமிழர் தம் அரசியல் மறுமலர்ச்சியும் தமிழருக்கான ஒரு தேசிய கலை வடிவத்தைத் தேட வேண்டிய தேவையை முன்வைத்தது. இந்தப் பின்புலம் கூத்தை மீள் உருவாக்கம் செய்கிறது எனலாம்.


இந்தவகையில் ஈழுத்துத் தமிழர்களின் கிராமியக் கலை வடிவமாகப் போற்றப்பட்ட கூத்து அக்கால அரசியல், சமூக, பொருளாதார சூழல் காரணமாக பன்முக முக்கியத்துவம் பெறுகிறன்றது. கர்ணபரம்பரைக் கதைகளையும், இதிகாசங் களையும் புராணக் கதைகளையும் கருப் பொருளாகக் கொண்ட கூத்து அரங்கு, அறபதுகளில் ஈழத்தில் ஏற்பட்ட அரசியற் சமூக மறுமலர்ச்சியுடன் சமூகத்தை சமூக வாழ்வியலை அதன் அவலங்களை ஓலங்களை வெளிக்காட்டும் சாதனமாக முகிழ்க்கின்றது, இதனை நாம் சங்காரம் கந்தன் கருணை, காலம் சிவக்கிறது. விடிவு சக்தி பிறக்குது போன்ற கூத்துக்கள் மூலம் அவதானிக்கலாம். இத்தகைய கூத்தரங்க முயற்சிகளின் முன்னோடிகளாக தாஜீசியஜ், மௌனகுரு, சுந்தரலிங்கம், சிவானந்தன், இளையபத்மநாதன் போன்றோரைக் குறிப்பிடலாம். இந்தச் சூழல் என்பது கள்வரை நீடிக்க அன்றையச் சூழலில் ஏற்பட்ட அரசயல் சூழலும் இனரீதியான பாகுபாடுகளும் கூத்தரங்கை அரசியல் பேசும் சாதனமாக மாற்றிற்று. கூத்து மண் சுமந்த மேனியருடன் அரசியல் பேச ஆரம்பிக்கிறது. இங்கு நெறியாளர் அரங்கு பிரசவமாகிறது. மேலும் உயிர்த்த மனிதர் கூத்தின் மூலம் தொண்ணூறுகளில் போராட்டச் சூழலின் அரசியற் பிரசாரச் சாதனமாக மாறிற்று. இந்தப் போக்கு பிற்பகுதியில் யுத்தத்தால் மன அழுத்தத்திற்குள்ளானவர்களுக்கு உளச் சிகிச்சை அளிக்கும் அரங்காகப் பரிமாணம் பெற்றது எனலாம். இந்த முன் முயற்சிகளுக்கு மௌனகுரு குழந்தை சண்முகலிங்கம் போன்றோர் துணை நிற்க. பிற்காலத்தில் அதனைத் திறம்பட இன்றுவரை வளர்த்துச் செல்பவர் சிதம்பரநாதன் என்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

இந்தவகையில் கூத்தின் பன்முக முக்கியத்துவமானது கூத்தாய்வுகள் கூத்து வளர்ச்சிக்கு உதவ கூத்து வளர்ச்சி கூத்தாயிவிற்கு உதவ ஆய்வும் கலை வளர்ச்சியும் இணைந்து சென்றமை ஈழத்து நாடக உலகில் ஒரு முக்கியமான அம்சமாகும். ஈழத்துத் தமிழ்க் கூத்துக்கள் தமிழ் அடையாளம் தெரிகின்ற வகையில் அதன் பாரம்பரிய கட்டமைப்புச் சிதையா வண்ணம் பாதுகாக்கப்படுவதிலும் மீள் உருவாக்கத்தின் மூலமாகப் பாரம்பரியத்தைப் பேணுகின்றபோதிலும் நவீன தேவைகளுக்கு ஏற்ப கூத்தம்சங்களைப் பேணுகின்ற போக்கிலும் கூத்தரங்கு வளர்ச்சி கண்டு நிற்கின்றது எனலாம்.

இன்று தமிழகத்தில் தெருக் கூத்துப் பற்றிய ஆய்வு சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இத்துறையில் மேற்கு நாட்டவர்கள் அதிக சாதனைகள் செய்துள்ளனர். அவர்களது ஆய்வுகள் தெருக்கூத்தை உலக அரங்குக்கொண்டு சென்றுள்ளன. இந்தவகையில் கலாநிதிப்பட்ட ஆய்வுகளான அ. அறிவுநம்பியின் "தமிழகத்தெருக்கூத்து" துளசி இராமசாமியின் "தமிழ் யக்ஷகானம் என்பன நூலுருவில் வந்துள்ளன. இவற்றைவிட பாரதக்கூத்துத் தொடர்பாக ஆறுமுகம், ரிச்சட் பிராஸ்கா, டாக்டர் ரவீந்திரன் எழுதிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. இக்கூத்துக் கலை தொடர்பான ஆய்வுகளில் மேற்கு நாட்டவரான ரிச்சாட் ஆர்மன்டோ பிராஸ்காவினது "The Theatre of the Mahabharatha – Therukkuthu Performance in South India" என்ற தலைப்பிலான ஆய்வு 1990 இல் நூலாக வெளிவருகிறது. இவர் Amald-Van Gennep Turner ஆகியோரின் முறையியலுக்கு அமைவாக ஆய்வினை மேற்கொண்டிருந்தார். மேலும் 1994 இல் நூலாக வெளிவந்த லெயிடன் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வான ஜோகன்னா மாரியா டிபுறுயினின் KattaiKutthu The Flexibility of a South India Theatre Tradition முக்கியமானது எனலாம். இது சமூக அமைப்புடன் கூத்தை ஒப்பிட்டு நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது எனலாம். அல்ப்ஹல்ரி வைற்றலின் மகாபாரதக் கூத்தை திரௌபதி கோயிற் சமயச் சடங்கு நிலைநின்று ஆய்வு செய்துள்ளார். இது 1991 இல் நூலுருவில் வெளிவருகின்றது மானிடவியல் நோக்கில் சடங்குகளை அணுகும்முறை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் கூத்துப்பற்றி தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மு.இராமசாமி கோட. பழனி போன்றோரது ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கன எனலாம்.

இந்தவகையில் சிங்கள கூத்தாய்வு முயற்சிகளை நோக்கின் பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திராவின் "Sinhalese folk Play and the modern stage" என்னும் ஆய்வு நூலும், பேராசிரியர் குணதிலகாவின் நாடகம் சொக்கரி ஆய்வுகளும், பேராசிரியர் திலகசிறியின் "Puppet Theater in Asia" என்னும் ஆய்வு நூலும், குறிப்பிடத்தக்கன. மேலும் சரச்சந்திராவின் மனமே சிங்கபாகு கூத்துக்களிற்குப் பின்னர் சிங்களக் கூத்துக்கள் மேலெழவில்லை. நாடகம், கோலம், சொக்கரி என்பன சிங்கள கிராமிய மக்களிடம் இன்றும் பயில் நிலையில் உள்ளனவாயினும் அவை பொருட் காட்சிச் சின்னம் போன்றே பேணவும் பாதுகாக்கவும் படுகின்றன. சிங்கள கூத்தாய்வுகள் சிங்களக் கூத்துக்களை வளர்க்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது எனலாம்.

இந்தவகையில் தமிழகக் கூத்தாய்வு கூத்து வளர்ச்சியுடனும் சிங்களக் கூத்தாய்வு கூத்து வளர்ச்சியுடனும் ஈழத்துத் தமிழ்க் கூத்தாய்வையும் கூத்து வளர்ச்சியையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது சிங்களக் கூத்தாய்வு கூத்து வளர்ச்சிநிலை ஐம்பதுகளில் ஆரம்பித்தபோது சரச்சந்திரா குணவர்த்தனா திலகசிறி போன்றோரது ஆய்வுகள் ஆங்கிலத்தில் வெளிவந்து உலக கவனத்தை ஈர்த்தன. இந்த முயற்சிகள் மூலம் சிங்கள பாரம்பரிய நாடக வடிவத்தை



தேடும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் பிற்காலத்தில் முன்னெடுப்பாரின்றி சிங்கள மக்களிடம் வளர்ச்சியடையவில்லை இதற்குக் காரணம் இந்நாடகப் போக்குகள் கர்ணபரம்பரைக் கதைகளுக்கே பொருத்தமானது என்பதும் சமகாலப் பிரச்சினைகளை முன்னெடுக்க முடியாதவை என்பதுமே ஆகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பார்ஸி நாடக வடிவத்தையே தமது நாடக வடிவமாகப் பார்த்தவர்களுக்கு ஈழத்துக் கூத்தாய்வு முயற்சிகளே வழிகாட்டியது எனலாம். இதன் காரணமாக தெருக்கூத்தைத் தமது பாரம்பரியக் கலை வடிவமாகப் பார்க்கும் போக்கு இன்று தோன்றியுள்ளது எனலாம். தமிழகத்திற்கு முன்னரே ஈழத்துத் தமிழ்க் கூத்து வித்தியானந்தன் என்ற புலமையின் கீழ் சிவத்தம்பி, மௌனகுரு போன்றோரின் கூட்டு முயற்சியால் கூத்துக்கலை மீள் உருவாக்கம் செய்யப்படத் தனது கலாநிதி கற்கைக்கான நூலாய்வாக கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் "Drama in Ancient Tamil Society" என்ற தலைப்பில் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட சமூகவியல் நிலைநின்ற ஆய்வு நாடக ஆய்வுகலைகைத் தமிழ்நாடக உலகின் கண்திசை திருப்பிற்கு எனலாம். இதைத் தொடர்ந்து இவர் வழியில் கலாநிதிப் பட்டத்திற்காக சி. மௌனகுரு "மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் ஈழத்துத் தமிழ் பிரதேசத்தின் கூத்தம்சம் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. மேலும் இப்பணியை தனது கலாநிதிப்பட்ட ஆய்விற்காக "வட இலங்கை நாட்டர் அரங்கு" என்ற தலைப்பில் காரை சுந்தரம்பிள்ளை முன்னெடுக்கிறார். இந்தப் பின்புலத்தில் கூத்து "சமூக மாற்றத்திற்கான அரங்காகவும்", "சமூக நெருக்கடி நிலையில் அரங்கு" முதலான தலைப்புக்களில் க. சிதம்பரநாதன் தனது முதுதத்துவமாணி பட்டத்திற்கும், கலாநிதிப் பட்டத்திற்குமாக ஆய்வைமேற்கொண்டார். கூத்து தமிழலரின் கலை அடையாளமாகவும், பிரச்சினைகளை எடுத்துக் கூறும் ஊடகமாகவும் நவீன நாடகங்களுக்கு அனுசரணையாகவும் ஈழத்துத் தமிழரிடையே

வளர்கிறது. ஈழத்து தமிழ்க் கூத்தியல் ஆய்வுகள் தமிழிலேயே வந்தமையினால் ஈழத்துத் தமிழ்க் கூத்துக்கள் பற்றிப் பிற நாட்டவர் அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை என்றே கருதத் தோன்றுகின்றது.

இத்தகைய ஈழத்து அரங்கியல் சூழலில் தமிழ் நாட்டு நாடகச் சூழலைப் பார்க்கின்றபொழுது தமிழ் நாட்டவரின் ஆய்வுகளைவிட, பிறநாட்டவரின் ஆய்வுகள் தெருக்கூத்துப் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்தினர். தேசிய நாடகப் பள்ளியின் பிரகடனத்தை அடுத்து தமிழ்த் தீவிர நாடக்ககாரர், கூத்தை நாடகத்துடன் இணைத்தனர். கூத்தில் தமிழகத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. கூத்து கூத்தாக ஒரு பழமை பேணும் கலையாகவே அங்கு உள்ளது. இன்னொரு வகையில் சொன்னால் இந்தியத் தேசியத்தின் பலமுகங்களில் ஒரு முகமாக இந்தியத் தேசியத்துள் கரைந்துவிட்டது. தமிழ்த் தெருக்கூத்து அத்தோடு அது அங்கு சமூகப்பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப் படவில்லை எனலாம். ஆனால் ஈழத்திலே கூத்தானது தமிழர்களின் தேசிய அடையாளமாகவும், வாழும் கலையாகவும் இருக்கின்றது. இதற்குக் காரணம் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட வரலாற்று அனுவங்களே. இந்த வரலாற்றுக்கூடாகவே ஈழத்துத் தமிழ்க் கூத்துக்கலை அதன் பன்முக முக்கியத்துவத்தை வெளிக்காட்டி நிற்கின்றது எனலாம்.


கூத்தின் கலைச்செழுமை காரணமாக அது பல்தேசியக் கலைகளுடன் ஒப்பிட்டு ஆராயும்நிலை தோன்றியது எனலாம். பேராசிரியர் வித்தியானந்தன் யக்ஷகானத்துடனும், பேராசிரியர் சிவத்தம்பி மௌனகுரு போன்றோர் பரதத்துடனும் கூத்தை ஒப்பிட்டு நோக்கியுள்ளனர். மேலும் அதன் கலைச்செழுமை காரணமாகவே பேராசிரியர் சரச்சந்திரா போன்றோர் சிங்கள நாடக வடிவங்களுக்கு கூத்தைப் பயன்படுத்தினர். இந்தவகையில் ஈழத்துத் தமிழ்க் கூத்தில்வரும் ஆட்டமுறை பாடல்கள், பாத்திரங்கள் என்பன கலைச் செழுமையுடையனவாய் உள்ளன. இதன் காரணமாகத்தான் நவீன நாடகங்களில் கூத்தம்சங்களான ஆட்டமுறைகள், பாடல்கள், பாத்திரங்கள், கதைசொல்லும் முறைமை தாளக்கட்டுக்கள் முதலானவை நாடகத்தின் நவீனவாக்கப்பாடுகளாக உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்தவகையில் ஐம்பதுகளில் ஏற்பட்ட அரசியல் மறுமலர்ச்சி ஈழத்துத் தமிழக் கூத்துமுறைகளை ஒரு தேசிய கலை வடிவமாகப் பார்க்கவேண்டிய தேவையை நிலைநிறுத்த அந்தப் பின்புலம் கூத்துக்கலையை சமூக மாற்றத்திற்கு இயைபுடைய ஒரு வடிவமாக அதனுடைய தனித்துவம் சிதைவுறாமல் மீள் உருவாக்கம் செய்யப்பட அந்த வளர்ச்சி நிலை கூத்தை சமூகச் சிந்தனையைக் கிளறும் ஒரு கருவியாக மாற்றமடையச் செய்கிறது. இந்த மாற்றம் சங்காரத்தில் முளைவிட்டு மண் சுமந்த மேனியரில் ஒரு அரசியல் பேசும் சாதனமாக வளர்ச்சி அடைகின்றது. இந்த வளர்ச்சி நிலை 90 களில் கூத்தை ஒரு அரசியற் தொடர்புச் சாதனமாகவும் அதன் பின் யுத்த வடுக்கலால் பாதிக்கப்பட்டோரின் பிணி தீர்க்கும் உளச் சிகிச்சை அரங்காகவும் வளர்ச்சி அடையச் செய்திருக்கிறது எனலாம்.

இந்த வகையில் கூத்தின் மீள் ஒருவாக்கத்திற்கு அரசியல் நிலை எவ்வாறு காரணமாக இருந்ததோ, அதுபோல் இந்த கூத்தரங்கின் வளர்ச்சிப் போக்கில் கூத்து அரசியல் பேசவும், அது அரசியல் தொடர்புச் சாதனமாகப் பயன்படவும் அந்த அரசியலால் ஏற்பட்ட யுத்த வடுக்களைத் தீர்க்கும் உளச்சிகிச்சை அரங்காகப் பரிணமிக்கவும் அரசியலே காரணமாயிற்று எனலாம்.

ஆயினும் ஈழத்துக் கூத்து முறைமைகளில் வடமோடிக் கூத்து வளர்ச்சி கண்ட அளவிற்கு துரதிஷ்டவசமாக தென்மோடிக் கூத்து மகிடிக் கூத்துக்களும் பேணப்படாத சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை காரணமாக கூத்தரங்கின் இன்னொரு முகாம் அழிவடையத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் இருந்து தென்மோடி மகிடிக் கூத்துக்கலையை மீட்டெடுக்க வேண்டிய தேவையுமுள்ளது எனலாம்.

---



தொலைந்து போன வாழ்வை
மீண்டும் தேடுகிறேன்
எங்கும் சிதிலங்களாய்
உடைந்து கிடக்கிறது.

முன்னர்
யாரும் தேடுவாரற்றுக்கிடந்த
வாழ்க்கை.

இன்று,
ஆயிரம் கயவருக்குள்
ஆட்கொண்டு
தொலைந்து தொலைந்து....
மீழ்கிறது.

நான் என்ன செய்வேன்?
வாழ்வு இப்படித்தான்.

இனி
பால்வெளியற்ற
தெருக்களில் பயணிக்கும் !

- அனேந் -

# இலங்கையில் நடனக் கலை

சர்மிளா ரஞ்சித்குமார்,



இலங்கை ஓர் கலைப் பொக்கிஷம் நிறைந்த நாடாகும். இங்கு தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியர் போன்ற இனத்தவர்கள் வாழ்கின்றனர். இங்கு ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் தனித்தனியே நடனங்கள் காணப்படுகின்றன. அவர்கள் அக் கலைகளைப் போற்றியும் பேணியும் வருகின்றார்கள். இக் கலைகளிடையே ஒற்றுமையும் காணப்படுகின்றன, வேற்றுமையும் காணப்படுகின்றன. அத்துடன் இந்திய நாட்டியசாஸ்திரத்தின் தாக்கம் இலங்கையிலும் பரவியுள்ளதை ஆய்வுகளின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

"இந்தியாவிற் போன்று இலங்கையிலும் நடனக் கலையிலே நாட்டியசாஸ்திரத்தின் தாக்கம் உண்டு. பொலநறுவ, தேவிநுவர போன்ற இடங்களில் இருந்து சைவ, வைஷ்ணவ கோயில்களிலே "தேவடியார்" இருந்து இசை நடனப் பணிகள் செய்தமைக்குச் சான்றுகள் உள்ளன". "கந்தளாயில் இருந்த விஜயராஜ ஈஸ்வரம் கோவிலிலே ஏழு தேவடியார்களும், தேவிநுவரயில் இருந்த விஷ்ணு கோவிலிலே 500தேவடியார்களும் கலை சமயப் பணிகள் புரிந்தனர் என அறியப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன கோவில்களிலும் தேவடியார் இருந்திருப்பர் எனவும் கூறமுடிகிறது. யாழ்ப்பபாணத் தமிழ் மன்னர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட வையப்பாடல், கைலாய மாலை முதலிய நூல்களிலே ஆடல், பாடல் பற்றிய குறிப்புக்கள் உண்டு. எனவே இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த அரச சபையிலும், கோவில்களிலும் தேவடியார் இருந்து கலை, சமயப் பணிகள் புரிந்திருப்பர் என்பது சம காலச் சிங்கள இலக்கியத்துடனும் சமகால இலங்கையின் பிறகோவில்களுடனும், தமிழகக் கோயில்களுடனும் ஒப்பிட்டு நோக்குகையில் ஏற்கக்கூடியதாக உள்ளது. மேலும் கி.பி 15-ம் 16ம் நூற்றாண்டுத் தென்மேற்கு இலங்கையிலே நிலவிய கோட்டை அரசியல் இருந்த ஈஸ்வரன் (சிவன்) கோவிலிலே தமிழ் பக்திப்பாடல் (தேவாரம்) பாடுதல் இடம் பெற்றதாகச் சமகாலச் சிங்களத் தூது இலக்கியம் கூறும். இசையுடன் நடனமும் அங்கு இடம் பெற்றிருக்கலாமெனக் கொள்ள இடமுண்டு. "கி.பி 19ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்திலே



வாழ்ந்த கனகி எனும் தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலே ஒரு நர்த்தகியாகவும் விளங்கினாள். இவளைப் பற்றிச் சுப்பையனார் என்பவர் கனகி புராணம் எனும் நூல் எழுதியுள்ளார்".[12] வண்ணார்பண்ணை போன்ற இடங்களிலே தேவதாசிகள் வாழ்ந்தனர். அக்காலத்திலே தமிழகத்திற் போன்று இங்கும் தேவதாசிகள் ஒழுக்கம் கெட்டவர்களாக இருந்த படியால் ஆறுமுகநாவலர் போன்றோரின் கண்டனத்திற்கு ஆளாயினர். ஆனால் ஆகம முறைப்படி ஒழுக்கமுள்ள கலைஞர்கள் இசை நடனப் பணிகள்செய்வதை நால்வர் பெருமான் விரும்பிலர் எனத் திட்டமாக் கூறமுடியாது. நடனக் கலைஞர் மட்டு மன்றி பரதசாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்ற அறிஞர் சிலரும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்தனர். கி.பி 17ம் நூற்றாண்டளவிலே தமிழ் நாட்டிலே வாழ்ந்த பிரபல நாட்டியகலைஞரான கங்கைமுத்துப்பிள்ளை (தஞ்சை நால்வரின் பாட்டனார்) எழுதிய பரதசாஸ்திர நூல்களிலொன்றான "நடனாதிவாத்யரஞ்சனம்" எனும் நூல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான ஸ்ரீலஸ்ரீ அம்பலவான நாவலர் முன்னிலையிலே பரிசோதித்து 1893லே தமிழ் நாட்டிலே பிரசுரிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. மேலும் இந்த நூற்றாண்டின் முப்பதுகளிலேற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சிக்கு அரும் தொண்டாறியவர்களிலே கலாயோகி ஆனந்தகுமாரசாமியும் ஒருவராவார். ஒழுக்கமும் சமயப்பற்றுமுள்ள திருவாவூர் ஞானம் எனும் நடனமாது இவருக்கு நடனக்கலை பற்றி அறிவுறுத்தினார் எனக் கூறப்படுகிறது. நடனக்கலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கற்க வேண்டிய மிகப் பிரதான நூல்களில் ஒன்றான நந்திகேஸ்வரனின் அபிநயதர்ப்பணத்தினை இவர் துர்க்கிரால எனும் அறிஞரோடு சேர்ந்து ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து

முன்னுரையுடன் நியூயோக்கில் 1917ம் ஆண்டு வெளியிட்டார். இதனால் ஆங்கிலம் கற்ற இந்தியர் இலங்கையர் மட்டுமன்றிக் குறிப்பாக வெளிநாட்டவரும் இந்திய நடனக் கலையினைக் கற்கவும் அதன் சிறப்பினை அறியவும் வழி கோழினார். இந்திய இலங்கைக் கலை பற்றி ஆராய்ந்து சொற்பொழிவுகள் ஆற்றியும் எழுதியும் இந் நாடுகளின் மக்கள் தத்தம் கலைகளின் பெருமையினையும், சிறப்பினையும் உணர்ந்து விழிப்படையச் செய்தார். தேவதாசிகள் இழிகுலத்தவர் அல்லர் என்றும் அவர்கள் சமூகத்திலே உயர்ந்த ஸ்தானத்திற்கு உரியவர் என்பதையும் ஆணித்தரமாகச் சான்றுகளுடன் கட்டுரைகள் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். இவர் எழுதியுள்ள சிவநடனம் எனும் ஆங்கிலக்கட்டுரை தொகுப்பும் (முதற் பதிப்பு 1918) குறிப்பிடற்பாலது. இதிலுள்ள சிவநடனம் பற்றிய சிறப்பான கட்டுரை ஏற்கனவே 1912லே சென்னையிலிருந்து வெளிவரும் சித்தாந்த தீபிகையிலே வெளிவந்துள்ளது. சிவ நடனம் இந்திய இசை பற்றிய கட்டுரைகள் மூலம் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தின் உட்பொருள் தத்துவம், இந்திய இசையின் சிறப்பு ஆகியவற்றைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வெளியே உள்ளவர்களும் அறியச் செய்தார். மேலும் யாழ்ப்பாணத்திலே இந் நூற்றாண்டிலே பரதக் கலை வளர்ச்சிக்கு உழைத்தவர்களில் திரு.எம்.ஏஸ்.பரம், கலைப்புலவர் நவரத்தினம், திருமதி மகேஸ்வரி நவரத்தினம், திரு,எஸ்,ஆர் இராசநாயகம், கலையரசு சொர்ணலிங்கம் முதலியோர் குறிப்பிடற்பாலர்.

தமிழகத்தை போன்று இங்கும் குறிப்பாக மரபுவழியாக இசை மரபுகளைப் பேணிவளர்த்து வந்தோரே இசை,நடனம் ஆகிய கலைகள் அழிந்து போகாது போற்றிப் பேணிவந்துள்ளனர். அவர்களில் நாதஸ்வரம்,குறிப்பாகத் தவில் கலைஞர் சிலர் இந்தியப் புகழ் பெற்றவர்கள். தமிழ்ப்பணி, சமயப்பணிகளிற் போன்று கலைப்பணிகளிலே அம்பலவாண நாவலர்,கலாயோகி ஆனந்தகுமாரசாமி போன்றோர் தமிழ் நாட்டவருக்கும் முன்மாதிரியாக விளங்கினர். கர்நாடக இசை பரதநாட்டியம் ஆகியன தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் நன்கு பயிலப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் பரத நாட்டியசாஸ்திர மரபு பின்பற்றப்படுகின்றது. அத்துடன் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலும் இது பின்பற்றப்படுகின்றது. இலங்கையிலே வாழ்கின்ற சிங்கள மக்கள் மத்தியிலே சாஸ்திரீய இசை நடனம் முதலியன பொலநறுவைக் காலம் தொட்டுத் பிரபல்யம் அடைந்தன எனலாம். பின்னர் ஏற்பட்ட பாண்டிய, விஜயநகரத் தொடர்புகளும் இவற்றிக்கு ஊக்கமளித்தன. இக்காலத்திலே (கி.பி 11-16ம் நூற்றாண்டு வரை) பெரும்பாலும் பரதநாட்டியம் தமிழர் மத்தியில் போன்று இவர்கள் மத்தியிலும் பிரபல்யமாக விளங்கிற்று.

செந்நெறி சாராத நடனங்கள் எனின் அது கூத்து, கூத்தில் பல நாட்டியசாஸ்திரங்களின் சாயல் காணப்படுகின்றது. இதிலும் அடவுகள், நடனநிலைகள், ஸ்தங்கள், ஜதிகள்,

பாவங்கள், ரசங்கள், நடன உருப்படிகள் போன்றவை காணப்படுகின்றன. “யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வடமோடி தென்மோடிக் கூத்துகளும் மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு வாசப்புக் கூத்துக்களும் சிலாபத்தில் வடமோடிக்கூத்தும் முல்லைத்தீவில் தென்மோடிக் கூத்தும் பயில் நிலையில் உள்ளது” தற்போது இவைகள் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. கிராமிய நடனங்கள் எனும் போது கரகாட்டம்,பொய்க்கால் குதிரை ஆட்டம், கும்மி, கோலாட்டம், காவடி, உடுக்கடிகதை, காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்து, மகுடிக்கூத்து போன்ற பல நடனங்கள் காணப்படுகின்றன.


சிங்களவர்களது நடனத்தை நோக்கின் கமிநட்டும் (Gami Nattuzm) கிராமிய நடனம், சாஸ்திரிய நட்டும் (Shastriya Nattum) சாஸ்திரீய நடனம் என இரண்டு பிரிவுகளாக உள்ளன. உடரட்ட நட்டும் சம்பிரதாயம் பதறட்ட நட்டும் சம்பிரதாயம், சபரகமுவ நட்டும் சம்பிரதாய போன்ற மார்க்கங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு கிராமிய நடனங்களாக நையாண்டி, உடுக்கி நடனம், பந்தேரு நடனம் போன்ற பல நடன வகைகள் காணப்படுகின்றன. கண்டிய நடனத்திலும் நாட்டியசாஸ்திர செல்வாக்கு உண்டு. குறிப்பாக இதில் உள்ள சில கரணங்கள் உத்பிளவனங்கள் முதலியன நாட்டிய சாஸ்திர சாயல் கொண்டவை என பிரபல பரதக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் கூறியுள்ளார். சிலப்பதிகார உரையிலே குறிப்பிடும் இலங்கைக் கூத்து என்பது ஒரு வேளை அதுவே பிற்காலத்தில் கண்டிய நடனத்திற்கு வழிவகுத்தன என வேறுசிலர் கருதுகின்றனர். இருப்பினும் இவையாவும் நாட்டிய சாஸ்திர மரபைப் பின்பற்றியே காணப்படுகின்றது.

பறங்கியர் சமுதாயத்தில் போத்துக்கேயரின் கப்றிஞ்சா பலே நடனம் ஆடப்படுகின்றது. போர்த்துக்கேயர்கள் இலங்கையை ஆட்சி செய்த போது அவர்கள் இனம் இலங்கையிலும் பரவியது. இவர்கள் மூலம் இந்த நடனம் இலங்கைக்கு பரவியது. இந்த நடனம் ஒரு சம்பிரதாய நடனமாகும். திருமணக்கொண்டாட்டம் போன்ற ஏனைய நிகழ்வுகளின் போதும் இந் நடனம் ஆடப்படும். பறங்கி இனத்தவர்கள் மட்டுமே இந் நடனத்தை ஆடுவார்கள். இதில் மேலைத்தேய பலே நடனத்தின் சாயல்கள் காணப்படுகின்றன. முஸ்லீம் மக்கள் கோள்களி நடனம் ஆடுகின்றார்கள். இவ்வாறாக பல வகையான நடனங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

தற்போது இலங்கை பல்கலைக்கழகங்களில் சிங்கள, தமிழ் நடனங்களிலும் பட்டப்படிப்பு நடாத்தப்படுகின்றது. இவற்றை எடுத்து நோக்கின் இலங்கையின் நடன வளர்ச்சி புலனாகின்றது.

இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளிலும், இந்திய நாட்டிய சாஸ்திர மரபு பரவியுள்ளது. இலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது எனக் கூறமுடிகிறது. இன்றும் இக்கலைகள் இலங்கையில் சாஸ்திர முறைப்படி பேணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அவர்களும் நீங்களும்



அவர்களின்
எந்திரப் பறவைகளிட்ட எச்சத்தில்
எங்கள் அத்திவாரமே அசைந்துபோனது
எறிகணை மத்தாப்பு வேடிக்கைகளால்
பசுமை பறிபோனது
அவர்கள்.
மண்ணை மீட்டதாய்ச் சொன்னார்கள்
நாங்கள் மனைகளை இழந்தோம்,
அமைதியை விதைத்ததாய்ச் சொன்னார்கள்
நாங்கள் போரை அறுவடை செய்தோம்.


அவர்களை விடுவோம்
அவர்கள் அன்னியர்கள்
ஆனால் நீங்களோ...
தொண்ணுறுகளில் பச்சைப் புலிகளுக்கு
பயந்தோடிய உங்களுக்கு
அபயமளித்த எங்களை
திறந்த வெளியில் சிறைவைத்தீர்கள்
ஏர்பிடித்துழுது ஊருக்கே
சோறிட்ட எங்களை
கையேந்த வைத்தீர்கள்
வாரி வாரிக் கொடுத்த எங்களுக்கு
"ஷொப்பிங்' கில் அளந்து போட்டீர்கள்.
போதும் உங்கள் அனாகரிகம்..... ஆனால்
அகதிகள் என்று மட்டு எங்களுக்கு
நாமம் சூட்டிவிடாதீர்கள்
நாங்கள் அகதிகளல்ல
இடம் பெயர்ந்தவர்கள் மட்டுமே.

புஸ்பராஜா ஷோபாநந்தினி குருஷ்

(திறந்த மட்டப்போட்டியில் 1ம் பரிசு பெற்ற கவிதை)

# மறு காலனித்துவம்

## ஜீவரெத்தினம் கெனடி



காலனித்துவம் (Colonization) என்னும் பதத்தை ஒக்ஸ்பட் ஆங்கில அகராதியின் இரண்டாவது விளக்கதில் "ஒரு தாவரமோ அல்லது விலங்கினமோ, தான் முன்னர் இல்லாத ஒரு இடத்தில் அல்லது இடப்பரப்பில் இடம் பிடித்தல் ஆகும்" என விபரிக்கின்றது. இதன்படி இந்தப் பெயர்ச் சொல்லானது நமக்கு ஒரு புதிய விளக்கத்தினைக் கூற முற்படுகின்றது. அதாவது "முன்னர் தான் இல்லாத இடத்தில்" எனும் பதமானது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகின்றது, இந்தக் காலனித்துவம் எனும் சொல்லானது "காலனித்துவப்படுத்து" (Colonize) எனும் வினைச் சொல்லில் இருந்து பிறக்கின்றது. அதற்கு கேம்பிரிஸ் ஆங்கில அகராதியானது "மக்களை (தன் நாட்டிலிருந்து) வேறொரு நாட்டிற்கு அனுப்பி, வாழவைத்து, ஆட்சி செலுத்துவது" எனும் விளக்கத்தினை அளிக்கின்றது. மேலும் இந்த காலனித்துவப்படுத்து (Colonize) எனும் வினைச் சொல் காலனி (Colony) எனும் அடிச்சொல்லிலிருந்து உருப்பெறுகின்றது இந்தக் காலனி (Colony) எனும் சொல் கொலோனியா (Colonia) எனும் சொல்லிலிருந்தும், அது கொலோனஸ் (Colonus) எனும் செல்லிலிருந்தும், அது கொலீரீ (Colere) எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்தும் உருவாகின்றது. இதன்படி கொலீரீ என்றால் "பண்படுத்து, உருவாக்கு, வசி (to cultivate, dwell)" என்னும் பொருளைக் குறிக்கின்றது. இதன்படி

காலனித்துவம் எனும் பதம் ஓரிடத்தில் புதிதாக ஒரு உயிரினம் போய் வசித்து அவ்விடத்தை விருத்தி செய்வது (cultivate) ஆகும். ஆனால் பின்னர் நமைமுறையில் இச் சொற்பிரயோகமானது வேறுவகையாக கையாளப்பட்டு வருகின்றது. அதன்படி ஒருநாடானது இன்னொரு நாட்டிற்குச் சென்று அங்கு தனது ஆட்சியையும், இறைமையையும் செலுத்தி அந்தப் புதிய நாட்டின் "கன்னித்தன்மையை" இழக்க வைத்து தனது ஆதிக்கத்தைச் செலுத்துவது என்று பொருள்படுமாறு கையாளப் படுகின்றது.

"காலனித்துவம் எனும் பதம் ஓரிடத்தில் புதிதாக ஒரு உயிரினம் போய் வசித்து அவ்விடத்தை விருத்தி செய்வது (cultivate) ஆகும். ஆனால் பின்னர் நமைமுறையில் இச் சொற்பிரயோகமானது வேறுவகையாக கையாளப்பட்டு வருகின்றது. அதன்படி ஒருநாடானது இன்னொரு நாட்டிற்குச் சென்று அங்கு தனது ஆட்சியையும், இறைமையையும் செலுத்தி அந்தப் புதிய நாட்டின் "கன்னித்தன்மையை" இழக்க வைத்து தனது ஆதிக்கத்தைச் செலுத்துவது என்று பொருள்படுமாறு கையாளப் படுகின்றது."

மேற்படி விளக்கத் தின்படி காலனித்து வத்திற்கு ஒரு நாடு, ஒரு இனம், தாவரம், விலங்கு என்ற ஒன்று மற்றொன்றில் ஆதிக்கம் செலுத்துவதை காணக் கூடிய தாக உள்ளது. இன்று நம் நாட்டி னைப் பொறுத்த வரை இக் காலனித்து வம் வேறுபல உருவங் களிலும் அடையாள ங்களிலும் ஊடுருவி நமது அடிப்படை சுதேச அடையாள த்தினைச் சிதைத்து வருகின்றது. அதன் அடிப்படையிலே, காலனித்துவத்தின் முன்னர் வரும் "மறு" எனும் முன் னொட்டானது பின்வரும் மூன்று வகைகளில் இக்கட்டுரை தீர்மானிக்கின்றது.

- II -

"மறு" (re-) எனும் முன்னொட்டானது பிரரெங்சு மொழியிலிருந்தும் அது இலத்தீன் மொழியிலிருந்தும் உருவாக்கம் பெறுகின்றது. அதன்படி எந்தவொரு பெயர்ச்சொல்லிற்கும் முன்னால் இந்த "re" எனும் முன்னொட்டு "மறுபடியும் அல்லது புதுப்பித்தல் அல்லது மறுபடியும் நிரப்புதல்" எனும் பொருள்பட வருகின்றது. இதன்படி இக்கட்டுரையின் தலையங்கமானது "மறு காலனித்துவம்" எனும் பதம் "re-colonization" என்கின்ற ஆங்கில வார்த்தையின் அடிப்படைப் பொருளைக் கொண்டே வழங்கப் படுகின்றது.

- III -

இன்றைய காலகட்டத்தில் நாம் கணினி யுகம் எனப்படும் "கணினி வெளி" (cyber space) யில் வாழ்கி ன்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதுவும் அதிஷ்டவச மாகவோ துரதிஷ்டவ சமாகவோ இக் கணினி வெளியா னது பல வகைகளிலும், பல உருவங்களிலும் நமது வாழ்வின் அடிப்படை நாதமான சுதேசியத் தன்மை, வாழ்வியல், சமூக விழுமியம், ஆக்கபூர்வமான தேடுதல் என்பவற்றின் உள்ளே புகுந்து அதன் கருவினைச்

சிதைத்து நம் வாழ்க்கை முறையை வேரோடுசாய்த்துள்ளது.

தேடுதல் என்பது ஆராய்ச்சியின் முதற் கட்டமாகும். ஆராய்ச்சி செய்யும்போது பலவிதமான புத்தகங்கயையும், ஆக்கங் களையும், ஆவணங்களையும், பலதரப்பட்ட மக்களையும் சந்திக்க வேண்டிய கடப்பாடு அவசியமான தாகின்றது. மேற்படியான அடிப்படை விடயங்களைப் பூர்த்தி செய்து, அதன் ஆதாரத்திலே (base) ஆராய்ச்சி எனும் கட்டடம் கட்டப்படுகின்றது. அப்படிச் செய்யும் இடத்தே, நாம் பல விதமான உண்மைகளையும், உண்மைத் தன்மைகளையும் கற்பனைக்கும் நிஜத்திற்குமுள்ள வேறுபாடுகளையும் கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆராய்சியின் முடிவில் நாம் சமூகத்தின் பிரதிபலிப்பினை உணர்ந்து கொள்ளலாம். சரியாக கூறுவதானால், ஒரு ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவில் ஒரு ஆராய்சியாளன் பல தரப்பட்ட உண்மைகளைக் கண்டு கொள்ளுகின்றான். உண்மையான தேடலும் இத்துடன் ஆரம்பமாகின்றது. காரணம் ஒரு ஆராய்ச்சியானது பலவிரமான கிளை ஆராய்சிகளுக்கும், வேறு புதிய ஆராய்ச்சிகளுக்கும் வழிசமைக்க வேண்டும்.

ஆனால், இன்று நம் கணினி வெளியின் ஒரு பாகமாக உள்ள இணையத்தின் மூலம் நம் ஆராய்ச்சியின் நோக்கம் குறிகியுள்ளது. எடுத்துக்காட்டாக பல தமிழ் வெளியீடுகள் இப்போது இணையத்தில் வெளியாகியுள்ள ஆங்கில ஆக்கங்களின் மொழிபெயர்ப் பாகவே உள்ளன. பல்கலைக்கழகமட்டத்தில் மட்டுமல்லாது சகல மட்டங்களிலும் இது காணப்படுகின்றது. இணையத்தை ஒரு உதவியாகவோ, அல்லது நேரடியாகவோ மட்டும் பாவியாது, அதை ஒரு முழுமையான ஆவணமாகவும், ஆவணச் சுவடியாகவும் பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் இவ் இணையத்தினதும் கணினி யினதும் அடிமையாக மாறிவிட்டோம் என்று சொல்வதில் எவ்விதமான மறுப்பும் இருக்கமாட்டாது என நம்புகின்றேன். காரணம் ஆக்கபூர்வமான ஒரு நிலைப்பாட்டினை எடுப்பதற்குப் பதிலாக, நமது அறிவினையும், ஆற்றலினையும் அழிக்கும் ஒரு பாரிய குடியேற்றவாதியாக (Colonizer) இக்கணினியும், கணினி வெளியும் வந்துள்ளது. இதன்படி நாம் ஒரு இணையக் காலனித்துவத்திற்குள் வந்துளோம் என்றால் மிகையாகாது.

நா.கதிரவேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதி "மறு" என்னும் சொல்லுக்கு "குற்றம்" எனும் ஒரு அர்த்தத்தையும் கொண்டுள்ளது. இக்கட்டுரையின் தலையங்கத்தில் உள்ள "மறு" எனும் பெயரடையானது "குற்றம்" எனும் கருத்தில் பார்க்கப்படும்போது, நாம் ஒரு "குற்றமுள்ள காலனித்துவத்தின்" அடிமையாக ஆகியுள்ளோம் என்று கூறினால் அது குற்றமாகாது.


- IV -

ஒருநாடு என்றல்லாது பல நாடுகளின் கூட்டாக நாம் மேற்கத்திய முறைமைக்கு அடிமையாகியுள்ள துர்ப்பாக்கிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளோம். மேற்கத்திய பாணியில் கல்விமுறையானது அவர்களது நில, வள, ஆளணி முறைமைக்கேற்ப

மாற்றியமைக்கப்பட்டு அதன் அடிப்படையிலே உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இன்று நாம் சுதேசக்கல்வி முறையையும், சுதேச மொழிக்கலவி முறையையும் விட்டுவிட்டு மேனாட்டு முறைமைக்கேற்ப நமது கல்விக் கோட்பாடுகளை மாற்றியமைத்துக் கொண்டு வருகின்ற கீழ்த்தரமான சூழ்நிலை உருவாகி வருவதைப் பார்க்க கூடியதாகவுள்ளது. அல்லது அன்று ஆங்கிலேய அரசு போட்டுக் கொடுத்த முறைமைக்கேற்ப நமது கல்வி முறைமையைப் பெரும்பான்மை ஆதிக்கத்துக்குட்பட்டு ஆக்கியுள்ளோம். இம்மேனாட்டுக் கல்வி முறைமைக் கடைப்பிடிப்பதால் நமது இனத்துக்கும், நாட்டிற்கும், கலாசாரத்திற்கும் என்ன நன்மை ஏற்படக்போகின்றன? இது பற்றிச் சிந்தித்துப் பார்த்தா நமது கல்வி முறையை ஆக்குகின்றோம்? ஆங்கில மொழிமூலக் கல்வி மட்டுமல்ல, மேலைத்தேயமுறைக் கல்வி கூட நமக்கு ஒருவிதமான போதையினை உண்டாக்கி, அதற்கு நாம் மேலும் அடிமையாகி விட்டோம். மற்றுமொருவகையான காலனித் துவத்திற்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளோம். உலக வங்கி (World Bank) ஐக்கிய நாடுகள் அமைப்பு (UNO) போன்ற காவலாளிகளின் மேற்பார்வையில் மேனாட்டுக் கல்வி எனும் காலனித்துவவாதி நம்மை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளான்.

பிரான்ட்ஸ் பனன் (Frantz Fanon) "கறுப்புத்தோல் வெள்ளை முகமூடி" (Black Skin / White Mask) எனும் நூலில், "காலனித்துவவாதி நம்மை விட்டகன்றபின்னும் நாம் அவனது முகமூடியை போட்டுக் கொண்டு திரிகின்றோம். அதன் பின்னால் உள்ள நமது கறுப்புத்தோலை மறந்து விட்டோம், அல்லது




அவ்வாறு ஒரு தோலே நமக்கு இல்லை – உள்ளது வெள்ளைத் தோல்தான் எனும் ஒரு மனோநிலை மாயையை (Psychological Illusion) உருவாக்கி வெள்ளையர்கள் எனும் நினைப்புடனும் மிதப்புடனும் வாழ்ந்து வருகின்றோம்" என்று கூறுகின்றார். மொழியாலும்,கலாசாரத்தாலும் நாம் மாறுவதைக்கூட ஓரளவு ஏற்றுக் கொண்டாலும், நம் அடிப்படை விழுமியத் திலிருந்தும் கூட விலகிப்போகின்றோமா எனும் ஐயப்பாடு இன்று ஏற்பட்டுள்ள. அவ்வெள்ளை முகமூடியினைக் கழற்றி நமது உண்மையான முக நிறத்தினைப் பார்க்க நினைத்தால், நாம் ஒரு கலப்பு



இனமாக (Hybridized Species) மாறியுள்ளோம் எனப் புரிய வரும். இம்மாற்றம் நமக்கு ஒரு உடன்பாடான (Positive Hybrity) கலப்பாக அல்லாது எதிர்மாறான கலப்பாக (negatie Hybriduty) மாறிவரும் சோகத்தை உணரலாம்.

மேனாட்டுக் கல்வி மூலம் மட்டுல்ல, நமது கீழைத்தேய மாயையான காலனித்துவவாதியின் கையில் கூட சிக்கிச் சீரழிந்து வருகின்றோம். நமது அண்டை நாடான இந்தியாவின் ஆதிக்கத்திலும் நாம் இன்று ஊறித்திளைத்து வருகின்றோம் என்பது கண்கூடு. நம் தாய்மொழியான தமிழ் கூட "தொலைக்காட்சித்தொடர்" எனும் போர்வையில் நமது கலாசாரத்தினுள் காலூன்றி ஒரு காலனித்துவவாதியாகி விட்டது. மேற்படி தொலைக்காட்சித்தொடர் எனும் காலனித்துவவாதியின் ஆட்சியால் நாம் நமது குடும்ப உறவு எனும் மெல்லிய இழையை அழித்துவிட்டு அதன் மூலம் ஒரு புதிய கலப்பினையும் உருவாக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டு, அதனூடாக ஒரு புதிய இனத்துவத்தினையும் உருவாக்க முற்பட்டுள்ளோம்.

"மறு" என்றால் "மச்சம்" எனும் ஒரு பொருளுண்டு. மச்சம் நமது உடம்பில் இருந்து பிரிக்கமுடியாத ஒன்றாகும். அது அளவில் சியதாகவும் வெளிப்படையாகத் தெரியாது விடின் நமக்கு எவ்விதமான தொந்தரவையும் ஏற்படுத்தாது. ஆனால் அது பெரிதாகவும் எல்லோருக்கும் தெரிந்தும் காணப்பட்டால் அம் மச்சம் அசிங்கமாகி விடும். "மச்சம்" எனும் வேறொறு பொருள்படவே இக்கட்டுரையின் தலையங்கத்தின் முற்சேர்க்கையில் "மறு"



எனும் பதம் பாவிக்கப்பட்டுள்ளது. அதாவது நாம் நமது அடையாளம், பாரம்பரியம், விழுமியம் ஆகிய மூன்றையும் மேனாட்டுக் கல்வி, கலாசாரம், தொலைக்காட்சித் தொடர் ஆகிய காலனித்துவவாதியால் தொலைத்துவிட்டும், தொலைத்துக் கொண்டும் இருக்கின்றோம். இந் நவீன காலனித்துவமானது மச்சம் போன்று நம்முடன் ஒட்டிக் கொண்டு பிரிக்க முடியாதவாறு உள்ளதால் இக்கட்டுரை "மறு – காலனித்துவம்" எனும் தலைப்பை பெறுகின்றது.

- V -

எனவே எனது தமிழ் இனத்தின் மொழி, கலாசாரம், அடையாளம் விழுமியம் என்பவற்றின் மீது "மறு - காலணித்துவம்" குற்றமாக, மச்சமாக அவற்றை ஆட்கொண்டு விட்டது. அது விதையாக அல்லாது விருட்சமாக வளர்ந்து விட்டாலும், அதன் வேரறுப்பதன் மூலம் நமது சுதேசத்தன்மையினையும் அடையாளத்தையும் காப்பாற்றிக் கொள்ளலாம். புதிய தலைமுறையை உருவாக்க நமக்கு நோவாகாலத்து வெள்ளம் ஒன்று வர வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் அதிவேகமாகச் செயற்பட்டு நமது இனத்தைக் காப்பாற்றிக் கொள்வது நமது கடப்பாடாகும்.

தேர் உள்ளது
வடம் உள்ளது
ஆனால்
இழுப்பார் யாருமின்றி
தேர் அசையாதுள்ளது.
வாரீர்
நாமாயினும்
தேரிழுப்போம்.

# சிறுவர்களின் விளையாட்டுக்களினால் ஏற்படும் ஆற்றல் விருத்திகள்

- சுந்தரமதி வேதநாயகம் -

விளையாட்டு என்பது சிறுகுழந்தைகளைப் பொறுத்தவரை பிறரது கட்டுப்பாடும் கட்டாயமும் இன்றி தானாகவே ஒரு செயலைத் தேர்ந்தெடுத்து அதைச் செய்யும் போது தம்முன் தோன்றும் மகிழ்ச்சிக்காக குழந்தைகள் அதைச் செய்வார்களானால் அச்செயல் அவர்களுக்கு விளையாட்டாகும். அவர்களுக்கு அதிலுள்ள நன்மை தீமையைப்பற்றி அக்கறை இல்லை அவர்களது நோக்கம் மகிழ்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதாகும்.

முன்பள்ளியில் உள்ளக வெளியக விளையாட்டுச் சூழல், விளையாட்டு சாதனங்கள் (உபகரணங்கள்) இயற்கைப் பொருட்களைக் கொண்டு விளையாடவிடும் போது பிள்ளையை சுதந்திரமாக விளையாட அனுமதிக்கும் அதேவேளை திறன் விருத்திகள் உள்ளடக்கப்பட்டதாகவும், தசைநார்கள் வலுப்பெறக்கூடியதாகவும் தானே முடிவெடுக்கக் கூடிய தன்னம்பிக்கையை ஊட்டக்கூடியதாகவும், தீர்வுகளைக் கண்டறியக் கூடியதாகவும் அவர்களின் எண்ணக்கருவை சிதைக்காமல் சிந்தனையை தூண்டக்கூடியதாக இருக்க வேண்டும் அத்தோடு ஆசிரியரின் கவனமும் அவதானமும் பிள்ளைகளில் இருத்தல் அவசியமாகும்.



முன்பள்ளி விளையாட்டுக்களுக்கு ஆசிரியரிடம் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமிடல் இருத்தல் அவசியமாகும். விளையாட்டு முதலில் குழந்தைக்கு மகிழ்ச்சியை உண்டாக்குவதாக இருக்க வேண்டும். குழந்தை மகிழ்ச்சியாக இருக்கும்போதுதான் தானாகவே விளையாட்டு உத்திகளை நுட்பங்களை பெற்றக் கொள்ளும் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டமிடலின் போது உடல் அசைவுகள் 40% மும் சந்தமுள்ள அசைவுகள் 30% எளியவித்திகள் (கற்கைகள்) 15% மும் எளிய இலகுவான விளையாட்டுக்கள் 15% அமைத்துக்கொள்ள வேண்டுமென கல்வியலாளர்கள் கூறுகின்றனர். அப்போதுதான் முன்பள்ளி விளையாட்டானது ஒருகுறைதீர்க்கும் நுட்பமுறையாக அமையும் என கூறப்படுகின்றது.



குழந்தைகளின் விளையாட்டுக்கள் பல வகைப்பட்டதாக உள்ளன. இயல்பான விளையாட்டுக்கள், பாவனை விளையாட்டுக்கள் நாடகபாங்கான விளையாட்டுக்கள், தனிமை விளையா ட்டுக்கள், நட்பை உண்டாக்கும் விளையாட்டுக்கள், பங்குபற்றாவிளையாட்டு இடைவினைபெறா விளையாட்டு கூட்டுறவுப் பாங்கான விளையாட்டுக்கள், பாரம்பரிய விளையா ட்டுக்கள் இவ்வகையான விளையா ட்டுக்களை முன்பள்ளிகளில் தனித்தும், குழுக்களாகவும் விளையாடு கின்றனர்.


இவ்வகையான விளையாட்டுக்களை விளையாடும்போது அவர்களை அறியாமலேயே உடல் உளவிருத்தி, சுயகட்டுப்பாடு, அறஒழுக்கம், பால்வேறுபாடு, தற்காட்சி, உள்ளுணர்வு வெளிப்பாடு, ஆக்கத்திறன் வளர்ச்சி, அழகியல்திறன் வளர்ச்சி, மொழிவளர்ச்சி, கணித எண்ணக்கருவளர்ச்சி, சூழலை அறிந்து கொள்ளும் தன்மை, மனவெழுச்சி வெளிப்பாடுகள், சமூகமயப்படுத்தப்படல், ஆளுமைப்பண்பு, தலைமைத்துவப் பண்புகள், ஒற்றுமைப் பண்பு, கூட்டுறவுப்பாங்கான மனப்பான்மை, விட்டுக்கொடுத்துப் புதியவற்றை கண்டுபிடித்தல், பிரச்சினைக் குத்தீர்வு காணும் வழிகளை கண்டறிதல், நட்பு, ஒற்றுமை, பகிர்ந்தளித்தல் போன்ற பல ஆற்றல்களும் பண்புகளும் வளர்கின்றன. இதனால் குழந்தைகளின் குறைதீர்க்கும் நுட்பமுறையாக அமைகின்றது.

இதை முன்பள்ளியில் எமது அனுபவம், பிள்ளையின் செயற்பாட்டில் எமது அவதானிப்பு ஆகியவற்றை மையமாக வைத்து ஆராயும்போது முன்பள்ளிக்கு வரும் குழந்தைகள் 3 – 5 வயதிற்குட்பட்டவர்களாகும். இவர்களைப் பார்த்தால் எப்போதும் ஓரிடத்தில் ஓய்திருப்பதை விரும்பாமல் ஓடிஆடி ஏறிபாய்ந்து, குதித்து இழுத்து, சுற்றிச்சுழன்று கொண்டிருப்பதையே விரும்புவர்களாக உள்ளனர். இதனால் சீரான இரத்தோட்டத்தினால் உடல்

ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான உள்ளமும் இருக்கும்" என்று பெரியோர் கூறுவர். அத்தோடு விளையாட்டுக்கள் குழந்தைகளின் உடல் உள, மனவெழுச்சி மற்றும் சமூக விருத்தியில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. பாரதியார் கூட "ஓடிவிளையா பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா" என்கிறார். "தேகசுகம் தேச சுகம்" என கூறுகின்றார். விளையாட்டின் மூலம் இரத்தோட்டம் சீர்பெற்று சமிபாடு, சுவாசம், கழிவகற்றல் போன்ற அனுசேப செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றது, இதன் மூலமாக உடல் விருத்தி மட்டுமின்றி உளவிருத்தியும் ஏற்படுகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களாகிய நாம் அடிப்படை திறனுக்கான அசைவுகளாக சமநிலைநடை, பாய்தல், கெந்துதல், நூல், கயிறு, துணியை முறுக்குதல், திருப்புதல், பின்னுதல், உடலை குறுக்குதல் நீளுதல், புரளுதல் வழுக்குதல், சுரங்கப்பாதைக்குள் தவண்டு செல்லல், தடைதாண்டல் போன்றவற்றையும் சந்தமுள்ள அசைவுகளாக உடற்பயிற்சி, பாடலும் ஆடலும், சங்கீதக்கதிரை போன்ற விளையாட்டுக்களிலும் எளிய வித்தைகளாக குஸ்த்திக்கரணம் போடுதல், மணல், நீர் விளையாட்டுக்களையும் குறிப்பிடலாம். இதில் அறிவாற்றல், அழகியல் ஆக்கம் சமூகமனவெழுச்சி விளையாட்டல்லாத விளையாட்டாக அமையும்.

உ-ம். *1.* மணல் - ஒரு சிறிய ஈர்க்கிலை ஒளித்துவைத்து எங்கிருக்கிறது என கண்டுபிடித்தல். (கண்டுபிடிப்பு.)



2. நீரை ஒரு பாத்திரத்தினுள் எடுத்து ஸ்பொங்சைப்போட்டு நீர்மறையும் வித்தையைக்காட்டி பின் பிழிந்து காட்டி மகிழ்தல்.

*3.* தண்ணீருக்குள் ரெஜிபோமை வைத்து சிறிய வெளிச்சபம் ஏற்றி அனுப்புதல் போன்ற விளையாட்டுக்களைக் கூறலாம்.

விளையாட்டுக்கள் மூலம் குழந்தைக ளிடையே நடத்தை மாற்றம் ஏற்படுவதை ஆசிரியர் அவதானிப்பக்கள் மூலம் அறியலாம்.

உ-ம் கொத்து இருக்கு கொத்து – குழுச் செயற்பாடு.

சிலந்திவிளையாட்டு – ஒற்றுமை

ஓடிப்பிடித்து விளையாடுதுல் - மகிழ்ச்சி சகலரும் பங்குகொள்வது.

கயிறு இழுத்தல் - எதிர்பார்ப்பு

சுறாமீன் - அவதானிப்பு, ஆர்வம்

அத்தோடு கட்டிடத்திண்ம விளையாட்டுக்கள், நீர் மணல் விளையாட்டுக்கள், புதிர்விளையாட்டுக்கள் போன்றவற்றால் அறிவாற்றலை விருத்தியாக்குகின்றது.

**விளையாட்டுக்கள் ஆக்கத்திறனை விருத்தி செய்கின்றது.**

ஒட்டுதல், வர்ணம்தீட்டுதல் நுண்ணியக்க விருத்தியையும் தசைநார்விருத்தி கிறுக்குதல் கிழித்தல் எதனையும் திறமையாக கையாளும் திறன்களைப் பெறல் உடலின் புலனுறுப்புக்களை கட்டுப்படுத்தி இயைபாக்கம் பெறல் முறைசார் கற்றல் செயற்பாடுள் தொடங்குமுன் கண், காது, கைகால் விரல், நாக்கு போன்ற உடல் உறுப்புக்களின் தசைநார்கள் விருத்தியுற வேண்டும் அப்போதுதான் பேச்சு வாசிப்பு எழுத்து போன்ற முறையான கற்றல் திறன்கள் விருத்தியடையும்.


பேரியக்கதிறன் விருத்தி - உ-ம் கால்களைமாற்றி மாற்றி வைத்து மேலும் கீழும் நடத்தல், பெரியபலகை அல்லது சாய்வில் மேலும் கீழும் நடத்தி கால்விரல் நுனியால் நடத்தல், இருகால்களால் முன்னும் பின்னும் பாய்தல்.

நுண்ணியக்க பேரியக்க திறன்கள் மேலும் விருத்தியுற விதைகள், போத்தல், சிரட்டைகள், மூடிகள், சிப்பிகள், வெற்றுப்பெட்டிகள், பெரிய எழுதுபொருள், வெண்கட்டி, நிறக்கலவைகள், பென்சில், கடதாசி, அட்டைகள் நிற துணித்துண்டுகள் மற்றும் பல்வகையான மரத்துண்டங்கள், பிளாஸ்டிக் வடிவம், புதிர்கள், கோர்ப்பதற்கு மணிகள், நூல், மெல்லிய கயிறு, வெளிக்கள விளையாட்டாக ஊஞ்சல், வழுக்கிகள், ஆடுபலகைகள், சங்கீத விளையாட்டு செயற்பாடு இவற்றின் மூலமாக நுண்ணிக்க பேரியக்க திறன்களை வளர்த்தெடுக்க உதவுகின்றது.

வெளிச்சூழலில் விளையாட்டுப் பூங்கா, தோட்டம், என்பவற்றில் சுதந்திரமாக விளையாடும்போது பல ஆற்றல்கள் விருத்தியுறுகின்றது. உ-ம். தாவர வளர்ச்சி, பூக்களின்வகை, இடங்களின் வகை, தாவரப்பகுதிகள், இதன் விஞ்ஞான எண்ணக்கரு விருத்தியுறுகின்றது. இவ்வகையான விளையாட்டுக்கள் யாவும் குழந்தையின் குறைநீக்கல் நுட்பமுறையாகும்.

மேலும் பிள்ளைகளுக்கு சொல்லி அல்லது எழுதி விளங்கவைக்க முடியாதவற்றை விளையாட்டுக்கள் மூலமாக இலகுவாகப் புரியவைக்க முடியும், அத்தோடு சமூகத்தால் மதிக்கத்தக்க நல்ல பழக்கவழக்கங்களை விளையாட்டுக்கள் மூலம் பதியவைக்க முடியும். சமயக் கருத்துக்கள் வரலாற்றுக்கதைகள் பாத்திரமேற்று நடித்தல், நாடகங்கள் ........ போன்றவற்றால் அவ்வுண்மையை புரிய வைக்க முடியும். உ-ம். உண்மை பேசுதல் அரிச்சந்திரனின் கதை கூறல் நடித்தல்.

தியானம் என்ற கூறாமல் மன அடக்கல் பயிற்சிக்கு கற்பனைக்கூடாக கொண்டு செல்லும் பயிற்சி அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி கொடுப்பதை அனுபவத்திலும் அவதானிப்பிலும் உணரக்கூடியதாக உள்ளது.



உ-ம். எல்லோரும் கண்ணை மூடுங்கள் நாங்கள் எல்லோரும் ஓர் அழகான காட்டிற்குச் செல்கின்றோம். அங்கே அழகான பூக்கள், பறவைகள், புள்ளிமான்கள், மயில்கள், பழமரங்கள் காணப்படுகின்றன. அழகான அருவி நீர் சலசலத்தோடுகிறது, நாங்கள் எல்லோரும் குளிக்கின்றோம் நீரை ஆளுக்குஆள் அடித்து வியைாடுகின்றோம் உடைமாற்றியபின் வருகிறோம். பழங்கள் ஆய்கின்றோம் உண்ணுகின்றோம், சந்தோசமாக பஸ்சில் ஏறி பாடசாலைக்கு மீண்டும் வருகின்றோம். கண்ணை விழிக்கும்போது முகம் பிரகாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதை அவதானிக்கின்றோம்.

முடிவாக உடல் உறுப்புக்களில் அகச்சுரக்கும், புறஞ்சுரக்கும் சுரப்பிகள் ஓமோன்கள் அமைவாக சுரந்து உடல உளநடத்தை மாற்றங்களை ஏற்படுத்து கின்றது. மொன்டிசோரி அவர்கள் கூறுகின்றார்கள் எல்லா விளையாட்டு க்களும், செயற்பாடுகளும் குழந்தைகளுக்கு இன்பமளிப்பதில்லை அவர்களின் குறை தீர்க்கப்படும்போது இதுதான் காரணம் என்று சொல்லமுடியாதவாறு குழந்தைகளின் ஆற்றல், அபிவிருத்தி, ஆர்வம் ஏற்படுவதாகவும் அந்த நுட்பம் விளையாட்டினூடாகவே குழந்தைக்கு கிடைப்பதாக கூறுகின்றார்.

அத்தோடு விளையாட்டுக்கள் அறிவாற்றலை மட்டும் விருத்தி பெறவைக்காமல் பல்வேறு நோய்களையும், மன அழுத்தங்களையும் விரட்டி அடிக்கும் சிறந்த மருந்தாக அமைவதாக மருத்துவர்களும், உளவியலாளர்களும் கூறுகின்றனர். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதால், விளையாட்டினூடாக மனவெழுச்சிகளான பயம், கோபம், குறைக்கப்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே முடியாக திட்டமிடல் உள்ளக, வெளியக விளையாட்டுச் சூழலை ஒழுங்குபடுத்தல் நுண்ணியக்க பேரியக்க ஆற்றலை மேம்படுத்துவதற்கான விளையாட்டினை தெரிவு செய்து மகிழ்வுடன் விளையாடவைப்பதில் குழந்தைக்கு தேவையான எண்ணக்கருக்கள் அறிவு ஆற்றலாக விருத்திபெற்று ஒரு குறைதீர்க்கும் நுட்பமுறையாக அமைகிறது என்பது அனுபவத்திலும் அவதானிப்பிலும் கண்ட உண்மையாகும்.

# மட்டக்களப்பில் குலக்குறிய வழிபாடு ~ ஒரு பொது நோக்கு

**செல்வராஜா பிரதீபன்**

இருபத்தியொராம் நூற்றாண்டில் சமூகம் முன்னேற்றம் கண்டு பல புதிய தொழிற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக செவ்வாய் கிரகத்தில் கூட மனிதர்கள் வாழக்கூடிய அளவிற்கு பாரிய மாற்றம் பூமியில் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. புதிய அபிவிருத்தி புதிய முன்னேற்றம் என்று உலகம் மாறிக்கொண்டு செல்லுகின்ற போதும், ஒரு சில மனித சமூகம் தாங்கள் தோன்றிய அதனோடு தொடர்புடைய பொருட்களை தம் குலத்தின் குலக் குறியாகக் கொண்டுள்ளனர். குலக் குறிகளாக (Totems) விலங்குகள், தாவரங்கள், ஆறுகள், மலைகள் போன்றவற்றைக் கொண்டுள்ளனர்.



குலக்குறி அமைப்பு பெரும்பான மையாகப் பழங்குடி சமுதாயத்தில் மட்டுமே காணப்படுகின்றது. இவர்களிடையே இவ்வமைப்பு சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளது. திருமண உறவு, வழிபாடு, உணவு முறை முதலானவை அவற்றுள் சில, குலக்குறி அமைப்புடைய ஒவ்வொரு சமுதாயத்தினரும் தமது குலக்குறி மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், நடைமுறைகள் முதலானவற்றை "குலக்குறியம்" (வுழவநஅளைஅ) என்று கூறலாம்.

குலக்குறி என்னும் சொற் பொருளின் தோற்றம் கிழக்கு வட அமெரிக்காவிலுள்ள "அல்கான்கின்" (Algonkin) பழங்குடியினரின் ஆட்டோதீமன் (Ototeman) என்னும் சொல்லோடு தொடர்புற்றதாகும். இவர்களின் மொழியில் இச் சொல்லிற்கு உடன் பிறந்தான், உடன்பிறந்தாள் உறவு (Brother Sisterkin) என்பது பொருளாகும் இச் சொல்லின் வேர்ச்சொல்லான "ஒத்தி" (Ote) என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்பது பொருளாகும்.

குலக்குறி நம்பிக்கை பெரும்பாலும் பழங்குடி சமுதாயதங்களில் அதன் முழுத்தன்மையுடன் காணப்படுகிறது. பழங்குடியல்லாத சமூகங்களில் இத்தன்மை முழுமையானதாகவோ எச்சங்களாகவோ காணப்படுகிறது. ஒரு குலக்குறிக்கும்



அதனோடு தொடர்புடைய குழுவிற்கும் உள்ள உறவு குழுவிற்குக் குழு மாறுபடுகிறது. உலகம் தழுவிய நிலையில் ஒன்றாக இல்லை சில குழுவினர் அவர்தம் குலக்குறியோடு கொண்டுள்ள உறவு கருத்தியலாகவும் (Ideological) சிலருடைய உறவு இயல் கடந்த மறை மெய்மை சார்ந்ததாகவும் (Mystical) சிலருடைய உறவு பயபக்தியுடன் போற்றும் தன்மையாகவும் (Reverential) வேறு சிலருடைய உறவு அவர்தம் குடிவழித் தொடர்பைக் காணும் முறையாகவும் உள்ளன.

குலக்குறி அமைப்புடைய சமுதாயங் களிலிருந்து பெறப்பட்ட இனக்குழுவியல் தரவுகளைத் தொகுத்து பார்க்கும் போது குலக்குறி முறை பல நிலைகளில் மாறுபட்டிருந்தாலும் அனைத்து சமுதாயங்களும் பல பொதுப் பண்புகள் கொண்டிருப்பதை காணவியலும். அவை

01. குலக்குறி பொதுவாக விலங்காகவோ தாவரமாகவோ இயற்கைப் பொருளாகவோ இருக்கும்.

02. ஒத்த குலக்குறியுடையோர் அனைவரும் ஒரு வழி மரபுடையவராக (Unilineal) இருப்பர்.

03. குலக்குறியைக் கொண்டுள்ள குழுவினர் அதைத் துணைவன், உறவினன், பாதுகாப்பவன், மூதாதையர் என நம்புவர்.

04. ஒவ்வொரு குலத்தவரும் குலக்குறியின் பெயரையே அக்குழுவினர் கொண்டிருப்பர்.

05. தனி ஒருவருக்கென்று குலக்குறியும் அல்லது குழுவினர் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் காணப்படுவதுண்டு.

06. குலக்குறியை சில நிகழ்ச்சிகள் தவிர பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர்.

07. குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் செய்வர்.

இக்குலக்குறிய வழிபாட்டு அம்சங்களை இலங்கையிலும் காணக்கூடியதாகவுள்ளது அந்தவகையில் உலகின் பல்வேறு பகுதிகளில் பண்டைக்காலத்தில் வேரூன்றி இருந்த வழிபாடுகளில் நாக வழிபாடும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறிய வழிபாட்டுடன் தொடர்பு உடையதாகக் காணப்படும் வழிபாடுகளுள் ஒன்றாக "வதனமார் வழிபாடு" காணப்படுகின்றது. எருமை மாடுகளின் பாதுகாவலனாக விளங்கும் வதனமாருக்கு சடங்கு செய்வது தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது.

ஒன்றாகும். தென்னாசியாவில் குறிப்பாக இந்தியா, ஈழம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தொல்குடியினரான ஒஸ்ரலோயிட் இன மக்களின் பண்டைய வழிபாட்டு நெறியாக இது விளங்கியது, ஆரம்பத்தில் இது ஒரு குலமரபுச் சின்னமாக விளங்கியது. நாகமானது தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் குலத்தைக் காக்கும் சின்னமாக வழிபட்டிருக்கலாம் அக்குலத்தவர் நாகத்திலிருந்து தோன்றியவர் மட்டுமன்றி நாகமே அவர்களின் நலனைப் பாதுகாக்கின்றது என்ற உணர்வும் ஏற்பட்டிருக்கல்ாம்.

இலங்கையின் ஆதிக்குடிகளான நாகர் இந்நாகவழிபாட்டுடன் தொடர்பு உடையவர்கள். நாகத்தின் மீது கொண்ட பயத்தினாலோ அன்றி அதனது வியத்தகு குணங்காளாலோ அன்றி அதன் பயன்பாடு காரணமாகவோ அதனை ஆரம்பத்தில் வழிபட்ட குறிப்பிட்ட குலத்தவர் நாகம் தமக்கு ஊறு செய்யாது என நம்பியதோடு அதற்கு தாமும் ஊறு செய்வதை தவிர்த்துக் கொண்டனர். இதனால் நாக வழிபாடு குறிப்பிடட ஒரு மக்கட் கூட்டத்தினரின் வழிபாடாக காணப்பட்டது. இது குலக்குறிய வழிபாட்டின் அம்சமாகவே காணப் படுகின்றது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறிய வழிபாட்டுடன் தொடர்பு உடையதாகக் காணப்படும் வழிபாடுகளுள் ஒன்றாக "வதனமார் வழிபாடு" காணப்படுகின்றது. எருமை மாடுகளின் பாதுகாவலனாக விளங்கும் வதனமாருக்கு சடங்கு செய்வது தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது.

கடந்த நாற்பதாண்டுகளுக்குமுன்பு வரை பரவலாக இருந்து வந்தது. எருமை மாட்டுப்பட்டிகள் அருகிவிட்டதுடன் போடிகள் அமைப்பும் சின்னாபின்னப்பட்டும் போனமையினால் வதனார் சடங்கும் இப்பொழுது அருகி விட்டது. முற்காலத்தில் போடிகளிடம் அவர்களது மாட்டுப்பட்டிகள் நிறைந்தி ருந்தன. போடிகள் வதனமார் சடங்கினை தவறாது வருடம் தோறும் செய்து வந்தனர்.

மேலும் முற்காலத்தில் மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்த யானைகளை அடக்கிப்பிடித்தல், குழுமாடுகளைப் பிடித்துக்கட்டுதல் முதலிய வேலைகளில் வதனமார் ஈடுபட்டுவந்து மக்களுக்கு உதவியமையால் இவர்கள் அங்கு தெய்வமாகப் போற்றப் படுகின்றார்கள். மட்டக்களப்பில் முற்றாக வன்னியர்கள் ஆட்சி செலுத்தி ஆரம்ப காலத்தில் அங்கு தொல்லை கொடுத்த மதயானைகளையும் குழுமாடுகளையும் அடக்கிவந்தமறவர் கூட்டமே வதனமாராகும்.

வதனமாருக்கு வில்லைக்கட்டுச் சடங்கு மூலமாகவும் வெளிமடை பத்ததி முறையிலும் சடங்குகள் நடக்கும். வதனமார் சடங்கின் போது தெய்வமாடுபவர் வதனமார் பிடித்த பட்டிக்காரனாக இருப்பார். பட்டிக்காரன் தெய்வம் ஆடமுடியாதிருந் தால் வேறு ஒருவர் ஆடுவார். இவ்வாறாக போடிமாரது குலத்தின் வழிபாடாக மட்டக்களப்பு பிரதேசத்தில் வதனமார் வழிபாடு இடம்பெற்றது. இன்றும் இவ் வழிபாடு சில இடங்களில் இம்பெறுவதைக் காணலாம்.

வேடவழிபாடுகளில் முக்கியமான அம்சம் பல தெய்வ வழிபாடு. இவர்களால் வழிபடப்படும் பல தெய்வங்களுள் முக்கியம் பெறுவது குமார தெய்வம். குமார தெய்வத்துக்கு அடுத்ததாக அவர்கள் வழிபாட்டில் முக்கியம் பெறும் தெய்வம் பெரியசாமி இத்தெய்வத்திற்குச் செய்யும் சடங்கு கதிரவெளி, பாற்சேனையில் ஆண்டு தோறும் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தமையைப் பலரும் அறிவார். குமார தெய்வம் வேடுவவன்னிமை குலத்தால் வழிபடப்படுகின்றது. மந்திரமில்லாமல் பறை அடித்துக் காவியம் பாட அத்தெய்வம் தானாக உருஎடுக்கும். இவ்வழிபாட்டின் போது பந்தல் அமைத்து ஈட்டி, அம்பு வில், கோடாலி, தாள்கத்தி, வாள் ஆகியவற்றை வைத்து வழிபாடு இயற்றுகின்றனர்.

இவ்வழிபாடானது மாடு, கன்றுகளுக்கு நோய்வராமல் இருப்பதற்கும் காட்டு மிருகங்கள் பிடிக்காமல் இருப்பதற்கும், நெல் நன்றாக விளைவதற்கும், மிருகங்களால் மக்களுக்கு தீங்கு ஏற்படாமல் இருப்பதற்கும் குமார தெய்வத்துக்கு வழிபாடு இயற்றப்படுகின்றது. இவ்வாறு வேட சமூகத்தின் குலக்குறி வழிபாடாக இது காணப்படுகின்றது. இன்றும் மட்டக்களப்பு பிரதேசத்தில் இவ்வழிபாடு இடம் பெற்றுவருகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அண்ணமார் வழிபாடும் குலக்குறிய வழிபாட்டோடு தொடர்புடையது. அண்ணமார், பொல்லுக் கிழவன், சிவகுடும்பன், என்னும் பெயர்களில் யாழ்ப்பாணத்தின் கிராமக் குறிச்சிகளிடையே வணங்கப்பட்டு வரும் வழிபாடு குறிப்பாக சமூக அக்காமைவில் அடிநிலை மதிப்பினைப் பெறும் பள்ளர் சாதியினரின் குல தெய்வமாக இவ் வழிபாடு காணப்படுகின்றது.

மேலும் மட்டக்களப்பு மக்கள் தொழில் கருவிகளை (உபகரணங்கள்) தெய்வ நிலையில் போற்றினார்கள். அதாவது தமது தொழிலுக்கு உதவியாக இருக்கும் பொருட்களை தம் குல தெய்வத்திற்கு ஒப்பானதாக வழிபட்டனர் என்றே குறிப்பிட வேண்டும். (புனிதப் பொருளாக)

> "யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அண்ணமார் வழிபாடும் குலக்குறிய வழிபாட்டோடு தொடர்புடையது. அண்ணமார், பொல்லுக் கிழவன், சிவகுடும்பன், என்னும் பெயர்களில் யாழ்ப்பாணத்தின் கிராமக் குறிச்சிகளிடையே வணங்கப்பட்டு வரும் வழிபாடு குறிப்பாக சமூக அக்காமைவில் அடிநிலை மதிப்பினைப் பெறும் பள்ளர் சாதியினரின் குல தெய்வமாக இவ் வழிபாடு காணப்படுகின்றது."

இத்தகைய குலவிருதுகள் பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில்

"தோணி கரையார்க்குத் தொப்பி
துலுக்கருக்கு
காணி யுழுமேழி சுளி காராளருக்கு
நாணி வில்லம் ¡ நாட்டிலுள்ள
வேடுவர்க்கு
எழுத்தாணி சுளிமுற்குகர்க்கு கமலமலர்
கோயிலார்க்கு
இட்டமுடன் இந்த விதிப்படிக்கு எல்லாம்
விருதெனவே
பட்டமதுகட்டிவைத்தான் பாண்டிமன்னன.
(மட்டக்களப்பு மாமியம்)

எனக் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

மட்டக்களப்பின் ஒவ்வொரு சமூகத்தவர்க்கும் குல தெய்வங்கள் குறிப்பிடப் பட்டிருந்தது. இது பற்றி சாதித் தெய்வக் கல்வெட்டு குறிப்பிடும் போது.

"உழவர்க்கு சிவனாமுடுக்கு மாரியம்மன்
நளவருக்கு வரவனாம் நாடார்க்குக்
கண்ணகையாம்,
தொழுவர்க்குப் பிதுராம் தொண்டருக்கு
வேலவனாம்.
மழுவருக்கு வீரபத்திரன் மறையோர்க்கு
நான்முகனே
வேந்தருக்கு மாலாம் வேடர்க்கு
கன்னிகளாம்
ஏந்துபணி செய்வோர்க்கு காளியாம் -
நேற்றுவைக்கிள்
முட்டன் முடுவன் முனிவரெவரார்வரினும்
பட்டமது கட்டிவைத்தான் பாண்டி மன்னன்
நிச்சயித்தான்."
(மட்டக்களப்பு மான்மியம்)

எனக்குறிப்பிட்டுள்ளது இதுவும் மட்டக்களப்பில் குலக்குறிய வழிபாட்டின் தொன்மங்களாகவே விளங்குகின்றது எனலாம்.

மேலும் மட்டக்களப்பில் மாடுகள் வைத்திருப்போாகள் தங்கள் மாடுகளை இனம் கண்டு கொள்வதற்காக தம் குலக்குறிகளை சூடு போடுவதன்மூலம் அடையாளப்படுத்திக் கொள்ளும் முறையும் காணப்படுகிறது. இவ் அடையாளங்கள் குலக் குறியாகவும் தனி நபர்களுக்குரிய குறியாகவும் காணப்பட்டன. இதுவும் குலக்கறி வழிபாட்டின் ஓர் கூறாக அமையலாம்.

இன்றைய நிலையிலும் மட்டக்களப்பில சில சமூகக் குழுக்கள் தங்களை அடையாளங்காட்டிக் கொள்வதற்காக குலக்கறிகளை பொறிப்பதனைக் காணலாம். உதாரணமாக ஏறாவூர்ப் பகுதியில் பிரதான வீதியின் முன்பாக அவ்வூரிலுள்ள கோவிலைக் குறிப்பிட்டு அமைக்கப்பட்டுள்ள முன்தூபியில் காளி அம்மனின் உருவச் சிலையும் தூண்களில் தராசு, சுத்தியல், உரைகல், நகைகள், குழுவுவதற்கான நீர்ப்பாத்திரம், முதலான பொருட்களும் காணப்படுகின்றன இதனை வீதியால் செல்பவர்கள் பார்க்கும் போது இப்பிரதேசத்தில் தட்டாரர் சமூகக்குழுக்கள் வசிக்கின்றனர் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும். அதுவும் குலக்குறி வழிபாட்டின் ஓர் அம்சமென்றே குறிப்பிடலாம்.

காலம் மாறினாலும் மக்கள் தங்கள் சமூக வழக்காறுகளை விட்டுக் கொள்ளாது கடைப்பிடித்து, அதன் செயற்பாடுகளிற்கு ஏற்றாற் போன்ற வழிபாடு செய்கின்றமை சமூக அடுக்கமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும் இதனை இன்னுமொரு சில சமூகத்தினர் தங்கள் சமூகவழிபாட்டு உறவுக்கான களமாகவே கொள்கின்றனர்.



# மண் இலங்கை தமிழ் சினிமா அடுத்தகட்ட நகர்விற்கு

– அ.ல. ரியலாஸ் –

நொந்து மாய்ந்து போனபடி உப்புச்சப்பில்லாத வெளி யீடுகளை அவ்வப்போது வெளிக்கொண்டு வரும் இலங் கைத் தமிழ் சினிமா வரலாற்றின் ஒரு ஆறுதல் தரக் கூடிய வரவே சமீபத்தில் வெளியாகிய மண் என்ற தமிழ்த்திரைப்படம்.

இலங்கைப் போர்ச்சூழல், தயாரிப்பா ளர்களின் தயக்கம், வினியோக வியாபாரத்தின் கேள்விக்குறி, அரசாங்கத் தின் ஆதரவின்மை, திறமையான கலைஞர்களை பெற்றுக் கொள்வதிலுள்ள கடினம். தொழில் நுட்பக் குறைபாடு இந்தியத் தமிழ் சினிமாக்களின் அளவுக்கதிக மான வரவு என்பன போன்ற பல குறைபாட்டுக் கார ணங்களிலால் இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறையின் வளர்ச்சி நிமிர்ந்து நிற்க முடியாதவையாக தன் ஆயுளை குறைத்துக் கொண்டு செல்லும் நிலைக்குள்ளாகியது.

சமீபகாலங்களில் பெயரிற்காக மட்டும் அவ்வப்போது சில குறுந்திரைப்படங்களும் நீளத் திரைப் படங்களும் எட்டிப்பார்த்த போதிலும் இவைகளிலிருந்து மாறு

பட்டதாக இந்திய தமிழ்ச் சினிமாக்களோடு போட்டியிடத் தக்கதாக புதியவனின் இயக்கத்தில் அறிமுக நடிகர் களான ஷனா, விஜித் ஆகியோர் நடித்து தென்னிந்திய கலைஞர்களின் உதவியோடு எம் நாட்டுத்தயாரிப்பாக வெளிவந்த ஒரு ஊட்டச்சத்துள்ள முழுநீளத் திரைப் படமே மண் ஆகும். இது தலித்துக்களின் சாதி ஒடுக்கு முறையின் எதிர்ப்பு குரலாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் வடக்குப் பகுதியான வவுனியாவிலுள்ள ஒரு சிறு கிராமமே கனகராயன் குளம் என்பதாகும். இக்கிராமத்திலுள்ள தரம் குறைந்த பின்னணிப்பாட சாலை ஒன்றில் கீழ்சாதி தோட்டக்காரப் பெண்ணாக நாயகி ஷனாவும் உயர்சாதித் தமிழனாக நாயகன் விஜித்தும் ஒரே வகுப்பில் கல்வி கற்கின்றனர். இவர்களி டையே ஏற்படும் நட்பு நாள் செல்லச் செல்ல காதலாக மாறுகிறது. காதலின் உற்சாகத்தில் ஊரெல்லாம் அலைந்து திரியும் இவர்களிடையே ஒருநாள் மோகத்தில் பருவங் கள் தடுமாறி உடலுறவு நிகழ்கின்றது. இதன்பின் தன் வயிற்றில் கரு வளர்ந்து வருவதனை நாயகனுக்கு நாயகி தெரியப்படுத்துகின்றாள் ஆயினும் நாயகனின் வீட்டார் நாயகி கீழ்சாதி இனம் என்பதால் அவளை ஏற்க மறுக்கின்றனர். இதனை காரணமாக வைத்து நாயகன் நாயகியை ஏமாற்றி நாட்டை விட்டு இலண்டனுக்குத் தப்பி ஓடிவிடுகிறான். தப்பி ஓடிய நாயகன் பதினெட்டு வருடங்கள் கழிந்து தனது சொந்தவூருக்கு திரும்பி வருகிறான். அப்போது அவனது மகன் அதாவது, நாயகனுக்கும் நாயகிக்கும் முறையற்றுப்பிறந்த வனாக கருதப்படும் இளைஞன் நாயகனை பழிவாங்கும் வெறியுடன் காத்திருந்து ஒரு சந்தர்ப்பத்தில் சரமாரியாக மாட்டிக்கொண்ட நாயகனை அடித்து மரம் ஒன்றில் கட்டிவைத்து தனது தாய்க்கு செய்த துரோகத்தினை சொல்லி அழுது இறுதியாக நாயகனை துப்பாக்கி ஒன்றின் மூலம் சுட்டுக் கொலைசெய்து தனது ஆத்திரத் தினை தீர்த்துக் கொள்கிறான். "கும்பிட மட்டுமே கைகள் தூக்கிய கூட்டத்துள் துப்பாக்கி தூக்கிய இவன் கரங் கள்" என்ற வாழ்வுக்கும் நிஜத்துக்கும் இடையிலான நெருக்கத்தை எடுத்துக் கூறியபடி படம் சுபம் பெறு கிறது. இதுவே இத்திரைப்படத்தின் மூலக்கதையாகும்.

படத்தின் தென்னிந்திய கலைஞர்களுக்கு குறைவில் லாத வகையில் இலங்கை கலைஞர்களது நடிப்பாற்ற லும் இதரபங்களிப்புகளும் வரவேற்கத்தக்க படியாகவே அமைந்திருக்கின்றன என்று சொல்லலாம். ஈழத்தின் மண்வாசனை, கிராமிய பேச்சு வழக்கு, கலாசாரம் பண்பாடு என்பன யதார்த்ததிற்கு குறைவில்லாதபடி மேற் பூச்சு இல்லாமல் சாதாரண வாழ்வுச் சூழலை பிரதிபலிப்ப தாக படமாக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் வடக்குச் சூழலை படமாக்கும்போது பனைமரங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படுவது இயல்பு இத்திரைப்படத்தில் பனை மரங்களுக்குப் பதிலாக வயல் வெளிகளை சுற்றிச் சுற்றி படமாக்கியிருப்பது ஒரு வித்தியாசமான உணர் வினை மனதிற்குள் எழுப்புகின்றது. மோகன் அடம்ஸ் உடைய கலை மிகச் சிறப்பாக தொழிற்பட்டிருக்கின்றது கனகராயன் குளத்தின் அழகு, குளம், வயல்வெளி, வரம்பு, மரங்கள், சிறுபற்றைகள், குடிசை போன்ற கிராமச்

சூழல் கலையுணர்வோடு தொகுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல் சி. ஜெ. ராஜ் குமாரின் ஒளிப்பதிவில் கமரா கைவண்ணம் பல கோணங்களிலும் சென்று நுட்பமான முறையில் காட்சிகளையும் உணர்வுகளையும் குறிப்பாக பின்னணிக் காட்சி ரூபங்களை ரசிக்கும்படியாக கோர்த் திருக்கின்றார். புதியவனின் பாடல் வரிகளும் சொல்லும் படியாகவே எழுதப்பட்டிருக்கின்றது. “கீழ் வானம் சூரிய னாய் விளங்கும்....” என்று ஆரம்பிக்கும் பாடல் மனதிற் குள் முணுமுனுக்கும் படியாக அமைந்திருக்கின்றது.

> “ஈரான், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளின் திரைப் படங்கள், மற்றும் சில முன்னனி இயக்குனர்களால் இயக்கப்பட்டுள்ள சிங்கள, மலையாளத் திரைப்படங்கள் என்பன இன்று உலக சினிமா அரங்கில் தனக்கான முத்திரையுடன் தரமான படைப்புகளை வெளியிட்டு வருகின்றன.”

திரைப்படம் சொல்லும் படியாக இருக்கின்ற போதிலும் வழமையான சினிமாத் தளம்பல்களுக்கும் குறைவில் லாமலேயே வந்திருக்கின்றது எனலாம். படத்தில் நகைச் சுவையினையும் அனுதாபத்தினையும் கொண்டு வர வேண்டும் என்று உருவாக்கப்பட்ட காட்சிகளான பள்ளிக் கூட டீச்சர் சிதம்பரம், வாத்தியாரிடம் அடிவாங்கும் சிறுவன், அவனது அக்கா, காதல் சுகுமார் என்பன கதைக்கு தேவையில்லாத மேலதிக பாத்திரவார்ப்புகள் என்றெ சொல்ல வேண்டும். சினிமாத்துறையின் வளர்ச்சி என்பது இரண்டரை மணித்தியாலத்தினை திரையரங்குகளில் நிறைவாகக் கழிக்க வேண்டுமென்ற ரசிகர்களின் எதிர் பார்ப்புக்கேற்ப படத்தொகுப்பினை வேகமாகவும் சுவார சியமாகவும் கொண்டு செல்வதிலையே தங்கியுள்ளது. இங்கு எல்லோருக்கும் அலுத்துப்போன வழமையான இலங்கைத் தமிழ் சினிமாவின் நாடக முறையிலான ஆமை வேகத்தில் விறுவிறுப்போ எதிர்பார்ப்போ தூண்டக் கூடிய காட்சிகள் இல்லாமல் தொகுக்கப்பட்டிருப்பது இலங்கைத் தமிழ் சினிமாவின் இடைவெளியினை இன்னும் கூட்டிக் கொண்டே செல்லும்.

கதாபாத்திரங்கள் இணையும் காட்சிகள் நீண்ட அறுவை கள் நிகழ்த்துவதை குறைத்து காட்சி ரூபத்திலும் படிமங்கள்மூலமாகவும் கதையினை கொண்டு சென்றி ருக்கலாம். அடுத்து திரைப்படத்தின் பின்னணிஇசை காட்சிகளுடன் ஒன்றித்து போகவில்லை. குறிப்பாக முதல் அரைப்பாதியில் வரும் காட்சிகளில் இதனை அவதானிக் கலாம். இது தொலைக்காட்சி தொடராக சிலகாலம் ஒளி பரப்பப்பட்ட மலைநாட்டு நாடகங்களின் இசையை விரவி நிற்பதுபோல் தோன்றுகின்றன.

சண்டைக்காட்சிகளுக்காக செட்போட்டு வாகனங்களை ஓட ஓடத் துரத்திப் புரட்டுவது, கடைத்தெருவில் உள்ள தளபாடங்களையும் பாவனைப் பொருட்களையும் அடித்து நொறுக்கித் தூளாக்குவது, பத்துப்பேரைத் தனி யாக நின்று அடித்து விரட்டும் இமாலய வீரனாக கதா நாயகனைக் காட்டுவது போன்ற காட்சிகளை விடுத்து சண்டைக் காட்சிகள் யதார்த்தமாக படமாக்கப்பட்டி ருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் இவை நல்ல படங் களுக்கு அவசியமற்றது. மேலும் நாயகனும் அவனது கூட்டாளிமார்களும் ஒன்றாக சேர்ந்து விடலைத் தனமாக ஊரைச் சுற்றுவதும் கள்ளத்தனமாக பற்றைக்குள்

ஒன்று சேரும் சோடிகளை ஒழித்திருந்து ரசிப்பது குளத்தடி மரத்தில் ஏறிக்குந்தியிருப்பது போன்ற காட்சிகளில் பாலுமகேந்திராவின் அழியாத கோலம் திரைப்படத்தினை ஞாபகத்தில் கொண்டு வருகின்றன. படத்தில் நாயகனின் சகபாடிகள் சமதோற்றமுடைய பாத்திரங்களாக காட் டப்பட்டிருப்பதை விடவும் நண்பர்களில் ஒருவனை குண்டு அப்பாவிப் பையனாகவும் இன்னொருவனை கறுத்த ஒல்லி விழிம்பு நிலை மனிதனாகவும் நடிக்க வைத்திருந்தால் நாயகக் கதாபாத்திரம் இன்னும் முதன்மைப் பட்டிருக்கும்.

நாயகிக்காகவே சதாகஷ்டப்பட்டு உழைக்கும் அவளது மாமா, தன்னையே பின்தொடரும் ஆசிரியரான குணபால் ஆகிய இருவரது அன்பையும் மீறி நாயகி நாயகன் மீது ஏன் காதல் கொள்கிறாள் என்ற உணர்வு காட்சி ரூபத்தில் சுவைபட தத்ரூபமாகப் படமாக்கப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

மாமாவான சுகுமார் இறந்ததும் கதறிஅழும் நாயகி அடுத்த காட்சியில் மோகத்தில் மயங்கி ஆனந்தத்தில் தனது கற்பையே பறிகொடுத்து விடுகிறாள். துன்பமும் இன்பமுமாக அடுத்தடுத்த காட்சிகளில் வருவது முரண் நகையினைக் கட்டமைத்து நிற்கின்றன. அத்துடன் ஒரு வரிக்கவிதையில் தன்னையிழந்து நாயகி தனது கற்பை விடுதல் அதனை மனந்தளராமல் நியாயபூர்வமாக ஏற்றுக் கொள்தல் என்பன பக்கா சினிமாத்தனம் என்றே சொல் லலாம்.

குணபாலன் என்ற பெயருடனான ஆசிரியர் கதாப்பாத்தி ரத்தின் நடிப்பாற்றல், நாயகன் நாயகி பாடசாலை சீரு டையுடன் தோன்றும் காதல் காட்சிகள், "காதல் காத்து என் மீது தொட்டதென்ன" என்று ஆரம்பிக்கும் பாடல் காட்சியில் நாயகன் நாயகியின் காமமேலெழுகை, நாய கனைத் தேடி பிடியாணை கொண்டு வந்த பொலிசாரை சமாளிப்பதற்காக நாயகனின் அப்பாடி நடந்து கொள்ளும் விதம், கூடவந்த போலிஸ்கார பெண்மணியின் புன்னகை, போன்ற பல காட்சிகள் நேர்த்தியாக அசட்டுத்தனமில்லா மல் மிகவும் சுவைபட படமாக்கப்பட்டிருக்கின்றன.

ஈரான், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளின் திரைப் படங்கள், மற்றும் சில முன்னணி இயக்குனர்களால் இயக்கப்பட்டுள்ள சிங்கள, மலையாளத் திரைப்படங்கள் என்பன இன்று உலக சினிமா அரங்கில் தனக்கான முத்திரையுடன் தரமான படைப்புகளை வெளியிட்டு வருகின்றன. அதீதம், அபத்தம் போன்றவற்றை விட்டு தனது சமூகம் சார்ந்த அவலங்களையும் நிகழ்வுக ளையும் பின்னணியாக வைத்து திரைப்படங்களை பேசும்படியாக படைத்து வருகின்றனர். அதுபோன்று இலங்கைத் தமிழ் சினிமாவும் நிறைவானதாக இந்திய மசாலாத் திரைப்படங்களின் மாமூலான காட்சிகளை மனதில் வைத்துக்கொண்டு செயற்படாமல் தனது நாட்டுச் சூழல், கலாச்சாரம், எம்முன்னே நடக்கும் மரணம், குறிக்குள் வாழும் அவலம், கண்ணீர் என்பவற்றின் இயல்பு கெடாதவண்ணம் காத்திரமான சினிமாவுக்குரிய இலட்சணங்களுடன் தனக்கான சுயபாதையில் படைக்கத் துணிந்து முன்வர வேண்டும் இன்னும் பெயர் சொல்லும் படியாக எமது சினிமா அடுத்த கட்ட நகர்விற்கு உயர்ந்து வளர வேண்டும் வாழ வேண்டும்.

# எல்லைகள் தாண்டி



**- கி. கலைமகள் -**

(திறந்த மட்டப்போட்டியில் 1ம் பரிசு பெற்ற சிறுகதை)

சனி பகையாம் எண்டு சொல்லி சனிக்கிழமையும் முடிஞ்சுது. புடிச்ச சனிதான் இன்னும் முடியல. கிழமை புடிச்சதே அம்மாக்குத்தான். மாப்பிள்ளை பார்த்தே அவக்கு வயதுபோயித்தாம். "சீதனம் தர என்னட்ட காசில்ல. நான் குடும்பக்காரன்" அண்ணன் சொல்லுறான். "இப்பத்தான் எனக்குப் பிள்ளபிறந்திருக்கு செலவப்பா" சின்னண்ணன். சொல்லுறான். "நானா உழைக்ககன் அவர் சொன்னாச் செய்வன்" அக்கா சொல்லுகிறதும் பிழல்ல தம்பி சத்தமே போடமாட்டான். அவனும் படிச்சு முடிச்சா சீதனத்தோட கலியாணம் முடிப்பான்.

"இருபத்தெட்டு வயது முடியப்போகுது. அவளுக்கு கலியாணம் முடிச்சுக் கொடுக்கிற நினைப்பு ஆருக்காவது இருக்கா" அம்மா தொடங்கினா நான் சும்மாவா இருக்கன் மாப்பிள்ள கிடைக்கணுமே அப்பா தன்ரபங்குக்கு கதைப்பார். "இவள் வீட்டில பொம்புளப்பிள்ள மாதிரி இருந்தா மாப்பிள்ள பாக்கலாம். புதினமான படிப்பு படிச்சு நாடகம் போட்டென்ன திரியுறாவு" எனக்கேசாட்டி அண்ணனுக்கு நித்திரவராது.

நானும் எனக்கு விரும்பின பாடத்தத்தான் படிச்சநான். மூத்த அண்ணனுக்கு எப்படி கொமஸ்படிக்க விருப்பமோ அப்படி எனக்கு நாடகம் படிக்க விரும்பம். படிச்சன் வேல செய்யிறன். நாடகம் போட்டன். என்ரவிருப்பப்படி நான் இருக்கிறதில ஒத்தருக்கும் விருப்பமில்ல. வாயாடியா, சண்டக்காரியா, சொல்லுக்கேக்காதவளாத்

தெரியிறன். இது இப்ப நேற்று தொடங்கினதில்ல நான் பிறக்கும் முன்னே தொடங்கிருக்கனும்.

அம்மாவ முதல் முதல் பொம்புள்ள பார்க்க வந்தது. அப்பாதானாம். அம்மா நல்ல வெள்ள, நல்லநீட்டு முடி, நல்லாச்சமைப்பா பாத்தோனே அப்பாவுக்கு புடிச்சிருந்ததாம். அம்மாக்கு ஆரம்பத்தில்ல விருப்பமில்ல. போகப்போக சரிவரும் எண்டு எங்கட தாத்தா முடிச்சுக்கொடுத்ததாம். நான் நல்லத்தானே இருக்கன். உன்ட, வயதில்ல எனக்கு ரெண்டு பிள்ளைகள் இருக்கு, எண்டு அம்மா சந்தோசமா சொல்லுவாவு. அம்மாக்கு எதிர்மாறா நான் பிறந்திருக்கன். அம்மாட நிறம்தான் இல்ல. ஆனா அம்மா மாதிரி எனக்கும் முடிநீட்டுத்தான். முடி நீட்டா இருக்கிறதில எனக்கு விருப்பமில்ல எண்டு அரவாசிய வெட்டினனான். அதுக்கு நடந்த பிரச்சன பெரிசு. என்ட முடியவெட்டிறதுக்கும் எனக்கு உரிமையில்ல. முடிவெட்டினா கலியாணம் நடக்காதாம்.

சின்னண்ணன் வருகுது, "சுமி நாளை பொம்பிளபாக்க வாறாங்க நேரத்தோட வந்திடு, ஊர் வேலெல்லாம் பாத்துத்திரியாம" என்னைவிட அண்ணனுக்குத் நான் சந்தோசம். "வந்திடும்மா" அப்பா பாவம்தான். என்னோட படிச்சபுள்ளைகளுக்கெல்லாம் கலியாணம் முடிஞ்சு எனக்கு முடியல்ல எண்டுதான் அப்பாக்கு கவல.

பின்னேரம் வீடு களகட்டிருக்கு மாப்புள்ள வரல மாப்புள்ளட அம்மா பாத்தா சரியாம். போட்டோ கொடுத்தனுப்பிருக்காம், எண்டு அம்மா சொன்னவ. எண்டைக்குமில்லாம இண்டைக்கு ரீ கொண்டுபோறன். எல்லாரையும் பாத்து சிரிச்சிடு எண்டு அண்ணன் சொல்லுறான். எல்லாரும் சொன்னவ பதட்டம் வருமெண்டு. ஆனா எனக்கொண்டையும் காணல.

பச்சக்களறில சாறிகட்டிருக்கிறதானாம். மாப்பிள்ளட அம்மாவாம். பக்கத்தில அப்பாவாம். சின்னண்ணனுக்கு தெரிஞ்சாக்களாம். குடும்பம் நல்லம்மாம். இதெல்லாம் எப்பநடந்ததோ தெரியல்ல. ஏதோ றீமோட்டில இயங்கிற ஆள போயிருக்கன்.

பேரெனென்னமா

சுமித்திரா.

சமப்பிய

ஓரளவுசமைப்பன்.

பெயின்ரிங், தையல் வேறெதாவது தெரியுமா?

எனக்கதில விருப்பமில்ல.

எனக்கு எழுதிறதான் விருப்பம். "இப்பெல்லாம் எழுதிறத்தால என்ன உழைப்பு மிஞ்சிப்போன ஒரு கவிதைக்கு ஐந்நூறு ரூபா தருவாங்க" எனக்கு விருப்பமானத நான் தீர்மானிக் ஒருத்தருக்கும் விருப்பம்மில்ல. இருக்க விரும்பாம எழும்பிப்போறன். எனக்கு தெரியும். வீட்டில ஒரு பூகம்பம் வெடிக்குமெண்டு பரவால இது என்ர வாழ்தலுக்கான போராட்டம்.

ஒரு முடிவும் சொல்லல்லையாம். சந்தோசம்தான் தலைக்குவந்தது தலப்பாவோட போச்சு. இவமட்டும்தான்



புதினமான பொம்பிள. எவ்வளவு கஸ்ரப்பட்டு பேசினனான். கலியாணம் முடிச்சா நாடகம் போடுறன் சமூகசேவ செய்யிறன் எண்டு திரியமாட்டாள். எண்டெல்லாம் சொல்லி கூட்டிவந்தா மகாராணி எழும்பிப் போறாவு. கலியாணம் முடிக்காம இருந்து எங்கடமானத்தையுமென வேண்டுறாவு. எப்ப இவள் இந்தவீட்ட விட்டுத் தொலையுறாளோ அப்பத்தான் இந்த வீட்டநான் வருவேன். சிண்ணண்ண் போறான். ஏன்ரீ எங்களப்போட்டுக் கொல்லுறா. நல்லதுக்குத்தானே சொல்லுறம். லவ் பண்ணுறா வேறசாதிப், பொடியன. அந்த பிரச்சினை முடிய வேறொரு பிரச்சின அப்பா ஒண்டுமே பேசல. தம்பி என்ன கண்வெட்டாம பாத்துக்கொண்டே இருக்கான்.

எனக்கு விருப்பமானது, என்ரகொய்யாமரம் தான் என்ர பூனையும் அதிலதான் ஏறிப்படுக்கும். எனக்கு பத்து வயதாயிருக்கும் போது மாமா தந்த மரம் இது. அப்பெல்லாம் இத வளக்கிறதுதான் என்ரகனவு. மாமா செத்தத கேள்விப்பட்டதும் இஞ்ச வந்துநிண்டுதான் அழுதநான். மாமா இந்த கொய்யா கம்புட நிறந்தான். என்ன, கறுப்புகுட்டி எண்டுதான் கூப்பிடுறவர். எனக்கும் அதுவிருப்பம். அதுக்கு பிறகு கறுப்புக்குட்டி எண்டு ஒத்தரும் என்னை கூப்பிடல்ல. எனக்கு முதல் முதலில்ல சுகம் இல்லாம வந்தோணே என்னண்டு தெரியாம இதில நிண்டுதான் அழுதநான்.

தம்பிவாறான். இப்பெல்லாம் அவனும் கதைக்கிறதில்ல. எண்ட பூன ஒண்டும் பேசாம எண்ட மடியில வந்து படுக்குது. அது பெட்டப்பூனதான். இந்த பூனய வளக்கிறதில ஒத்தருக்கும் விருப்பமில்ல. அது குட்டிபோட்டா நான்தான் ஏச்சும் வேண்டுற. கண்ண இறுக்கிமூடித்துபடுக்குது. "ஏனக்கா இப்படிப்பண்ணின, அவங்க நம்மட குடும்பத்தபத்தி என்ன எண்ணுவாங்க" எனக்கு புடிக்கல்லடா "ஏதோ நான் பரீட்ச எழுதிற மாதிரியும் அவங்கேள்விகள் மாதிரியும், வேணாம்டா." இப்படியே இருக்கப்போறியா? இல்லடா என்ன புரிஞ்சிக்கிறவன முடிக்கப்போறன். அண்ணன் தான் விரும்பின பிள்ளையத்தானே முடிச்சவன். நானும் எனக்கு விருப்பமானவன் ஏண்டா முடிக்கேலாது? இது இந்த வீட்டில நடக்கிற காரியம் இல்லெண்டு தெரியும். ஆனா எனக்குள்ள ஒரு நம்பிக்க.

எங்கட வீட்டில ஒரு மூலையில்ல இருக்கு சைக்கிள். அக்கா சைக்கிளதான் பாக்காள். நான் பள்ளிக்கு போகக்குள்ள அக்காதான் என்ன ஏத்திப் போறவள். பத்தாம் ஆண்டிலதான் எனக்க சைக்கிள் வேண்டித் தந்தவங்க. அதுவர நான் அவளோடுதான் போனனான். இந்த ஊரில சைக்கிள் றேஸ் வைச்சா அக்காதான் பெஸ்ரா வருவாள். நானும் அக்காவும் எந்த நாளும் கடக்கரரோட்டாலதான் போவோம். அண்ணனுக்கு தெரிஞ்சா ஏசுவான். எண்டு நாங்க சொல்லுறதில்ல. நாங்கரெண்டு பேரும் சேர்த்து சைக்கிளோடி மூண்டுவருசமிருக்கும். அண்ணன் ஏச ஏச அக்கா சைக்கிள் ஓடுவாள். அவளுக்கு அதுதான் விருப்பம்.

இந்த வீட்டில என்னோடையும் சைக்கிளோடையும் கொய்மரத்தோடையும் அந்த பூனையோடையும் தான் விருப்பம் எண்டு சொல்லுறவள். நான் தான் இந்த அண்ணனுகள பாத்துப் பாத்து கெட்டுப் பொயித்தன். அக்கா, வாவன் சைக்கிளில ஒரு றவுண்ட் பொயித்து வருவம்.

அவளுக்கு இது புதினம் தான். நான் மாறியிருக்கன் எண்டு அவளுக்கு விளங்கிருக்கு. ஒண்டும் பேசாம சைக்கில தள்ளுறாள். கடக்கரரோட்டாலா போகக்குள்ள கட்டாயமா என்னோட கதைப்பாள். அக்கா கேற்றத்தாண்டிறாள். நானும் எண்ட சைக்கிலோட பின்னால, எண்ட பேரச்சொல்லி அண்ணன் கூப்பிடுறான். நான் திரும்பிப்பாக்கிறதில்ல எண்டு முடிவெடுத்திட்டன். சத்தமா கூப்பிடுறான்.

எங்கட சைக்கிள் எங்கட வீட்டுக் கேற்றதாண்டி வளவத்தாண்டி றோட்டத்தாண்டி வேகமா போகுது. சந்தோசமான பயணம் தான் இது.

# நம்பிக்கை

- கி. கலைமகள் -

எனக்குள்
கனவுகளை விதைத்த
கடற்கரை ஓரங்கள்

கண்ணாப்பூக்களை
அறிமுகப்படுத்திய
ஆற்றங்கரைகள்

தென்னோலைகளில்
சரசரக்கும் - இரவு
நட்சத்திரங்கள்

என் முற்றத்து
கிணறுகளுக்குள்
முகம் காட்டும்
நிலவின் விம்பங்கள்

மேகங்கள்
குடைபிடித்து நிற்கும்
என்
வீட்டு கூரை

நிலாபிடிக்க ஓடித்திரிந்த
பௌர்ணமி இரவுகள்

இரவோடு இரவாக
பிரித்தெறியப்பட்டோம்
முன்னைய பொழுதுகளின்
நினைவுகளோடு

எங்கள் பாதங்கள் பதிந்த
எங்கள் பெருமணல்களில்
குருதிகளும்
உடல்களும்
புதைந்து கிடக்கின்றன

மண்ணின் பெயராலும்
மதத்தின் பெயராலும்
இனத்தின் பெயராலும் - நாங்கள்
பிரித்தெறியப்பட்டோம்
பிணம் தின்னிக் கழுகுகளுடன்

வாழத்துடித்த
எங்கள் கனவுகள்
கசக்கி எறியப்பட்டன
இனத்தின் அடிப்படையில்

பிச்சை ஓடுகளில்
ஏறி நிற்கின்றன - எங்கள்
நம்பிக்கைகள்.


நாளை விடியல்
நமக்கென மாற்றும்வரை
நம் நம்பிக்கைகள்
பிச்சை ஓடுகளிலே
குந்திக் கொள்ளட்டும்

எங்கள் நம்பிக்கைகள்
சாத்தியமாகும்வரை

திறந்த மட்டப் போட்டியில் 2ம் பரிசு பெற்ற கவிதை

# 'ஆட்டமும் பாட்டமும் அளவிடும்தாளே'

வே. சிறிதரன்



தாளத்தை பற்றி இசையினுள் கூறும் போது பண், பா, பாணி என்றும் நிருத்தத்தில் கூறும் போது பாவம், இராகம், தாளம் என்றும் கூறப்படுகிறது.

இங்கு தாளம் இசை நிருத்தம் இரண்டுக்கும் பொதுவானது.

இசை பாடலுக்கும் ஆடலாகிய கூத்திற்கும் அடித்தளமாய் இருப்பதால் "தாளம்" எனப்பெயர் பெற்றது என்பர். தாளம் கைகளினால் கொட்டுவதனால் (போடப்படுவதனால்) பாணி என்றும் கொட்டும் என்றும் அக்காலத்தில் வழங்கி வந்தது.

இசையும் கூத்தும் வரம்பு கூத்து செல்லும் ஆறுகள் போன்றவை.தாளங்கள் அவற்றின் கரை போன்றது.

"தாளம் கரையே தழுவிசை யாறே
ஆற்றின் போக்கே யவனவளாட்டம்"
"ஆட்டமும் பாட்டமும் அளவிடும் தாளே"

தாளமானது ஆட்டத்தையும் இசையையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் உள்படுத்துவதுடன் அவ்விரண்டையும் அழகுற, மிடுக்குடன் விளங்கச் செய்வதும் ஆகும். தாளம் எனும் சொல் வழக்கில் வரவே கொட்டு, பாணி எனும் சொற்கள் வழக்கொழிந்தன போலும் . தாளக்கலை ஒரு சமுத்திரம் போன்றது. அது ஆழ்ந்து அகன்று செல்லத்தக்கது.

தாளம் போடும் முறையில் இடக்கைமேல் வலக்கையால் காதை போடுதல் தாளம் எனப்படும். இங்கு காதை போடுதல் என்பது அடித்தலைக் குறிக்கும். வலக்கை மேல் இடக்கையால் காதை போடுதலை சம்மியம் எனக்கூறப்படுகிறது.

இதையே
"வலக்கைத் தாக்கே சம்மியமாகும்
இடக்கைத் தாக்கே தாளமாகும்" என
பஞ்சமரபு கூறுகிறது.

"வலக்கரு சம்மியம் எண்ணுதல் வழங்கும்
நிலக்குவி இடகரம் பண்நெறி நிறைக்கும்"
எனதாண்டவமாலிகாவும் உரைக்கின்றது.

தாளம் - கொட்டு, அசை, தூக்கு, அளவு எனும் கால மாத்திரைகளை உடையது.

"கொட்டு மசைஞந் தூக்குமளவு
ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்"

இங்கு கொட்டு அரைமாத்திரை எனவும் அசை ஒரு மாத்திரை எனவும் தூக்கு இரண்டுமாத்திரை எனவும் அளவு மூன்று மாத்திரை எனவும் கொள்க என்பர்.

அடியார்க்கு நல்லார் இவற்றில் செயற்பாடுகளை கூறுமிடத்து

| | | |
|---|---|---|
| கொட்டு | - | அமுக்குதல் |
| அசை | - | தாக்கியெழுதல் |
| தூக்குதல் | - | தாக்கி தூக்குதல் |
| அளவை | - | தாக்கின ஓசை |

என சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையை காணமுடிகிறது.

தாளத்தை இன்னும் நோக்கும் போது வலக்கையும் இடக்கையும் தம்மில் கூடியும், பிரிந்தும் தொழிற்படுவது தாளமே. தாளங்களின் உயர் நிலைகளைப் பத்தாக வகுத்துள்ளனர். அவை காலம், மார்க்கம், கிரியை, அங்கம், ஜாதி, களை, லயம், ஜதி, பிரஸ்தாரம் எனப்படும்.

இசையையும் நிருத்தத்தையும் அளவிடுவது தாளமே. அவற்றின் விரிவு பல தாள நூல்களில் காணலாம். கைகளில் தட்டுவதால் நிகழும் தாளத்தின் வழியாகக் கால்களின் தட்டால் நிகழ்வது தாளச்சதியாம்.

தாளமானது கூத்து. இசை, வாச்சியம் எனும் மூன்றையும் பொருத்தி நின்று அவற்றுள் மிகுதியும் குறையும் தோன்றாதபடி பாதகாத்து நிற்பதாகும். இதனை வடநூலாசிரியர் 'லயம்' என்பர்.

"வேள மயூர நடையுளும் லயமெ
பிளிர்குர வோசையும் லயமெ"
என நர்த்னாமிர்த்திலும்

"நாசியின் நடமிடு கால் நயமுற
தேசியும் மார்க்கமும் திரண்டு தோய்வுற
வாசி வாசிதிடமுறும் ஞானமாய்"
என சிவஞானக்கருத்தும் கூறுகிறது.

தாளங்கள் தேசி தாளம் என்றும் மார்க்க தாளம் என்றும்





இருவகைப்படுகின்றது. இங்கு தேசி தாளம் எனும் போது இதனுள் உள்ள மூன்று அங்கமானது லகு, திருதம், அனுத்திருந்தை கொண்ட ஏழு தாளம் முப்பத்தைந்து தாளம் நூற்றியெழுபத்தைந்து தாளங்களையும் குறிக்கும்.

மார்க்க தாளம் எனும் போது லகு, திருதம், அனுதிருதத்துடன் குரு, புலுதல், காகபாதம் எனும் 6 அங்கங்களை கொண்டு காணப்படும். இது 108 தாளத்தை குறிக்கும்.

இங்கு பெரும்பாலும் தேசிதாளம் இசையில் பயில்வென எனவும் மார்க்க தாளம் கூத்தில் பயில்வன எனவும் கூறுவர்.


சதி(ஜதி) அல்லது தாளவொத்து அல்லது சதிர் கோவை (ஜதிக்கோவை) என்பது சொற்கட்டுகள் எனப்படும். அவை வாயினால் அழகுபட இசையுடன் கூறப்பெற்று தாள உறுப்புக்களை அவற்றுக்கு அமைத்தவாறே மிக்க நினைவாற்றலோடு கையில் அல்லது கஞ்சற் கருவியால் கொட்டப்படும். அதற்கேற்ப ஆடுபவர்-ஜதி பிறழாது தாள அங்கம் (உறுப்பு) நினைவு கொண்டு ஒன்றிய நினைவோடு ஆடிமுடிப்பர். இத்தகு ஜதி முறைகள் ஏதேனும் ஒரு தாளத்தினுள் அடங்குமாறு லயஞானமுள்ள அறிஞர் ஒருவரால் கோர்க்கப்படும். ஒரு கோர்வைக்கு எத்தனை மொத்த எண்கள் கொண்டுள்ளனவோ அவற்றிற்கு ஏற்றவாறு உறுப்புக்கள் அமையும்.

அத்தகு மொத்த எண்கள் செம்பால் செம்பாலாக அதாவது பாதி பாதியாக கணித்து வந்தால் இறுதியாக வருகின்ற எண்கள் 3, 4. 5, 7. 9 என்ற ஏதேனும் ஒன்றினுள் முடிவுறவேண்டும். அப்படி வராதவிடத்து அது தாளத்தினுள் பொருத்தமுடையதன்று.

"ஏக இரண்டை விட்டு
ஏறர் ரெட்டை ஏற்றி
தூறு செம்பால் செய்மின்
வீருயுரு பமைவாம் ஆட"

என நர்த்தனாம்ருதம் கூறுகின்றது. இங்கு உதாரணமாக 192 எண்கள் கொண்ட ஜதிக்கோர்வையை எடுப்போமாயின் இது எத்தாளத்திற்கு பொருந்தும் எனப்பார்ப்போமாயின் இவ் 192 எண்களை பாதியாக்கும் போது

192, 96, 48, 24, 12, 6, 3 என வருதலை காணமுடிகிறது. இவ்வாறு 3ல் முடிவதால் அது திஸ்ர ஜதிக்கோவை என கணிப்பிடப்படும். இதே போன்று எடுக்கப்டும் ஜதிக்கோர்வை எண்ணானது பாதியாக்கப்பட்டு மிகுதி 4ல் வந்தால்



அது சதுஸ்ர ஜதிக்கோவை இதே போன்று 5ல் வந்தால் கண்ட ஜதிக்கோவை. 7ல் முடிந்தால் மிஸ்ரஜதிக்கோவை. 9ல் முடிந்தால் சங்கீர்ண ஜதிக்கோவை என்றும் கணிப்பிடப்படுகிறது. இங்கு அட்சரம், மாத்திரை என்ற அலகுகள் உபயோகிக்கப்படுகின்றது.

இங்கு ஓர் அட்சரமானது எடுத்துக்கொள்ளப்படும் நடைக்கு ஏற்ப 3 மாத்திரையாக 4 மாத்திரையாக 5 மாத்திரையாக 7 மாத்திரையாக 9 மாத்திரையாக கணிக்கப்படுகின்றது.

ஜதி கோவையில் ததிங்கிணதோம் வகைகள் மிகவும் முக்கியமானது. இது ஆடுபவரின் லய நுணுக்கங்களை வெளிப்படுத்த உதவுகிறது. அந்த வகையில் நடைமுறை தாளங்களான ஆதி, ரூபகம், மிஸ்ரசாபு, கண்டசாபு தாளங்களின் 5 ஜாதி ததிங்கினதோம் வகைகள் தாளக்குறியீட்டுடன் எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

இங்கு சதுஸ்ரஜாதி, திஸ்ரஜாதி, மிஸ்ரஜாதி, கண்டஜாதி, சங்கீர்ணஜாதி ததிங்கினதொம் வகைகள் ஒவ்வொன்றும் ஆவர்த்தனத்தில் எவ்வாறு சமத்தில் இருந்து எத்தனை மாத்திரைகள் கழித்து எடுக்கப்படுகின்றது எனவும் அப்படி ஒரு மாத்திரைக்குள் அவ்வெண்ணிக்கை வராவிடத்து இன்னும் ஒரு ஆவர்த்தனம் கூட சேர்த்து இரண்டு ஆவர்த்தனத்தில் உள்ள மாத்திரைக் கணக்கில் ததிங்கினதொம் வகைகள் கணக்கிடப்படும்.

எனவே நிருத்தத்தில் அதன் மரபுவழி கையாளப்படும் ஆரம்ப அடிப்படை பயிற்சிகளான சொற்கட்டுக்குள் ஓர் மாணவர்க்கு மனதில் நன்கு பதிந்து அதற்கேற்ப அபினயங்கள் செய்து, சொற்கட்டுக்களின் தாளகால அளவுகளையும் தாளப் பிரமாணங்களையும் இன்னோரென்ன அடிப்படை விசயங்களையும் தெரிந்தகொள்வாராகில் அத்துறையில் நன்கு பிரகாசிப்பர்.

# “வர்த்தக சினிமாக்களில் இளைஞர்கள்”

## தேவ. அலோசியஸ்



01. சினிமாக்கள்.

சினிமா என்றால் என்னவென்று பொதுவான வினாவொன்றை வினவினால், ஒரு பொழுதுபோக்குச் சாதனம் என்னும் விடையே எமக்குச் சாதாணமாகக் கிடைக்கின்றது. இந்த விடையைச் சொல்பவர்கள் யார்? என ஆராய்வோமானால் சினிமா என்கின்ற விடயத்திற்குள் நுழையாத, மேலதிக நேரங்களை இதற்காக செலவிடுகின்றவர்களாகவே இருக்கின்றனர்.

உண்மையில் சினிமா என்கின்ற ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்ததொன்றாக இருக்கின்றது. இந்தச் சக்தி, உலகின் எந்தவொரு மூலைக்கும் ஜாதி, மதம், இனம், மொழி, படித்தவன், பாமரன் என்னும் எல்லைகளைக் கடந்து ஆதிக்கம் செலுத்தக் கூடிய சக்தியாக இச் சினிமா விளங்குகின்றது. எந்தவொரு விடயத்தையும் இலகுவாக எவருக்கும் சொல்லிவிடக் கூடியது. இதனால்தான் இதனை “Powerfull media” என்கின்றோம். இதன் தாக்கங்களும், பாதிப்புக்களும் சிறியோர் முதல் பெரியோர் வரை இலகுவாக ஊடுருவுகின்றது.

இன்னுமொரு வகையில் இந்தச் சினிமாவைப் பார்த்தால் பல விடயங்களைச் சொல்லித்தரும் பாடசாலைபோல் ஆகிவிடுகிறது. பெண்ணடிமை, பெண்விடுதலை, வன்முறை, ஆண் ஆதிக்கம், உளவியல், சமூகவியல், விஞ்ஞானம், கண்டுபிடிப்பு, மருத்துவம், ஆன்மீகம், பாலியல், பால்நிலை, கைத்தொழில், தொழில்நுட்பம், சமூகச்சீர்கேடுகள், அரசியல், அறிவியல், விவசாயம், வர்த்தகம், சமூகப் பிரச்சினைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்களைக்கூட சினிமாவின் வாயிலாய் நாம் அறியக்கூடியதாய் அமைகின்றது.

இந்தியா போன்ற சில நாடுகளில் சினிமா என்னும் ஊடகம் ஒரு தொழில் பேட்டையாக மாறியிருக்கின்றது. பெரியதொரு முதலீட்டைப் போட்டு பெரியதொரு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் தொழில்பட்டறையாக சினிமா மாறியுள்ளதையும் நாம் காணலாம். ஏனைய தொழில்களின் முதலீட்டைக் காட்டிலும் சினிமாவிற்கான முதலீடு பல மடங்காக அதிகரித்திருக்கிறது. சினிமா பற்றிய எந்த விதமான அறிவும் இல்லாதவிடத்தும்

சினிமாவில் முதலீட்டைப் போடுவதற்கு இன்றும் எத்தனையோ தயாரிப்பாளர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர். அந்தளவிற்கு சினிமா வருமானத்தைப் பெற்றுத்தரும் ஒரு தொழிற்பட்டறையாக மாறியிருக்கிறது. பணத்தைப் போட்டு பணத்தை எடுக்கும் ஒரு சூதாட்ட இயந்திரமாகக் கூட சினிமாவைக் கூறலாம். இந்தியாவின் குக் கிராமங்களில் இன்றும் படித்தவர் தொடங்கி பாமரன் வரை "ஒருவன் பணக்காரன் ஆவதற்கு அரசியல்வாதியாக வேண்டும், கோடீஸ்வரன் ஆவதற்கு சினிமாவில் நுழைய வேண்டும்" என்று கூறுவர்.

ஒரு நடிகன், அல்லது இயக்குனர் அல்லது தொழில்நுட்பக் கலைஞன் எவனாயிருந்தாலும் சரி அவனது முதல் சினிமா, ஜனரஞ்சக வரவேற்பைப் பெற்று, வசூலை தனதாக்கிக் கொண்டு விட்டால் சினிமா அவனுக்கு பல வாசல்களை திறந்து விட்டு காத்துக் கொண்டிருக்கும். தற்செயலாக மேலே கூறப்பட்ட ஒருவனது முதல் சினிமா அவனை கவிழ்த்து விடுமானால் அவனது சினிமா வாழ்வும்




அஸ்தமனமாகிவிடும். சினிமாவின் மூலம் இன்று அரசியலில் கால் பதித்தவர்களும் ஏராளமாக உள்ளனர்.

இந்தியா, இலங்கை, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறு சினிமாவின் மூலம் அரசியலுக்குள் நுழைந்தவர்கள் இருக்கின்றனர். உதாரணமாக அமெரிக்காவின் கலிபோனியா மாநிலத்தின் மேயராக இருக்கும் ஆனோல்ட் ஸ்வாஸ்னேக்கர் Rambo போன்ற பல வெற்றிப்படங்கள் மூலம் அறிமுகமானவர். இந்தியாவில் எம்.ஜி.ஆர் தொடங்கி இன்றுள்ள விஜயகாந், நெப்போலியன், சரத்குமார் போன்றவர்கள் வரை சினிமாவின் மூலம் அறிமுகமாகி அரசியல் வாதியானவர்களே ஆகும். இலங்கையில் ஜீவன் குமாரதுங்க போன்றவர்களை குறிப்பிடலாம்.

சினிமாக்களை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையாக நோக்கலாம். ஆரம்ப காலகட்டங்களில் வெறும் சித்திரங்களாகவே சினிமாக்கள் அறிமுகமாகியது. பின்னர் புகைப் படங்களாகவும் Photo Slidshow அதன்பின் அசையும் படங்களாக அதாவது ஊமைப் படங்களாகவும், இறுதிக்கட்டமாகவே பேசும் படமாகவும் சினிமாக்கள் விரிவடையத் தொடங்கியிருக்கிறது.

ஆரம்பகால சித்திரங்களாக அமைந்தவை மூலம், பார்ப்பவர்கள் சிந்தனைகள் மூலமே விடயங்களை உணரமுடிந்தது, அதன் பின் ஒரு கதையை தொடர் புகைப்படங்காக Slide Show காட்டப்பட்டு கதை பின்னணியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இறுதிக் காலகட்டத்தில்தான் சினிமாவில் வரும்

பாத்திரங்கள் தங்களையும், ஏனையவரையும் வெளிப்படுத்தும் பேசும் படங்களாக வெளிவரத் தொடங்கியது.

இன்றைய கால கட்டத்தில் சினிமாவைப் பல நாடுகள் பல மொழிகளில் தயாரிக்கின்றது. ஆங்கிலம், பிரன்சு, லத்தீன், உருது, கிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், சிங்களம், தமிழ் போன்ற பல்வேறு மொழிகளிலே தயாரிப்புச் செய்யப்படுகிறது. இந்த சினிமாக்களைப் பொறுத்தவரையில் நேர அளவுகளை வைத்துக் கொண்டும் தரம் பிரிக்கவும் முடியும். ஒரு மணிக்கு மேலுள்ளவை திரைப்படங்கள் என்றும், நிமிடங்கள் தொடங்கி ஒரு மணிக்கு உட்பட்டவற்றை குறும்படங்கள் என்றும் தரம்பிரிக்க முடியும்.

**02. வர்த்தக சினிமாக்கள்.**

வர்த்தக சினிமாக்கள் என்னும் பதத்திற்குப் பதிலாக மசாலா சினிமா அல்லது மசாலாப் படம் என்னும் பதங்களையும் பயன்படுத்துவதன் மூலம் தெளிவானதொரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நாம் உண்ணும் உணவு வகைகளில் ஒன்றான கறிக்கு மசாலாத்தூள் போடுகின்றோம். இந்த மசாலாத் தூளில் அடங்கியிருப்பவை, பல்வேறுபட்ட சுவைச் சரக்குளாகின்றது. ஆக மொத்தத்தில் "மசாலா" என்பது பல்வேறுபட்ட ரசங்கள், அல்லது சுவைகள் அல்லது பொருட்கள் என்பவற்றின் ஒன்றிணைந்த சேர்வையையே இது குறித்து நிற்கின்றது. எனவே "மசாலா சினிமா" என்கின்ற போதும், சண்டை, கவர்ச்சி, நடனம், பாடல், வன்முறை, நகைச்சுவை போன்றவற்றின் கலவைதான் மசாலா சினிமா எனப்படுகின்றது.


"மசாலாத் திரைப்படம்" என்கின்ற பதம் நம் கண் முன் நிறுத்துவது என்ன? அருவருப்பான பாமரத் தன்மை கலந்த ஒரு எதிர்மறையான முகம், அதற்கான காரணம்தான் என்ன என ஆராயத்தொடங்கினால், நடைமுறையில் சாத்தியப்படாத காட்சிகளை கொண்டமைவதே என முடிவுக்கு வரலாம் என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறோம்.

இந்த வர்த்தக சினிமாக்களில் நூறு வீத நிஜமும், நூறு வீத கற்பனையும் கலந்துள்ளது, முதலில் நூறு வீத நிஜத்தை எடுத்து நோக்கினால், கதையளவில் மட்டுமல்ல, காட்சிக்குக் காட்சிக்கு நிஜம் தேவைப்படுகிறது. அதாவது சரியாகச் சொல்லப் போனால் நாம் நிஜத்தில் எவ்வாறு பேசுகிறோம் என்பதை அப்படியே பிரதிபலிப்பது. அப்படி பார்ப்போமானல் நாம் பேசும் போது பின்னணி கேட்பதில்லை. நாம் திரைப்பட கதாநாயகன், கதாநாயகி போன்ற நன்றாகப் பாடக்கூடியவராகவோ, நடனமாடக்கூடியவராகவோ அல்லது அழகாகவோ இருப்பதில்லை. பாடுவதும், ஆடுவதுமே சாத்தியமாகாத நிலையில் பாடிக்கொண்டே ஆடுவதென்பது கேள்விக்குறியே. அதற்காக பின்னணி இசையோ, பாடல்களோ இல்லாத படங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இவைகள் இல்லாத படங்களை இன்றைய இளைஞர்களே முதலில் விமர்சனம் செய்பவர்களாக இருக்கின்றனர். ஆக மொத்தத்தில் கலை என்னும் விடயத்திற்குள் சினிமா இருப்பதனால் நூறுவீத நிஜம் இருப்பதில்லை. இருபது வீதமாவது

கற்பனை இருக்கிறது. கற்பனை என்பது இணைந்ததுதான் கலை.

அடுத்து நூறு வீது கற்பனையைப் பார்ப்போம். பாருங்கள் அதிசதயத்தை, நூறு வீத கற்பனையை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம் இதற்கு விஞ்ஞானத் திரைப்படங்களே சாட்சி, சிலவேளையில் வரும் பாத்திரங்கள் கூட நாம் வாழ்நாளில் சந்தித்திராதவை பேசவைக்கப்படுகின்றன உயிரற்றவையும், உயிருள்ளவையாக சித்தரிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு துரதிஸ்டம் தமிழில் அவ்வாறான திரைப்படங்கள் உருவாவதில்லை. போதிய தொழில்நுட்ப வளர்ச்சியின்மையே இதற்குக் காரணம். ஆகவே மேற்தரப்பட்ட வாதங்களில் இருந்து எமக்கு புரிவது என்ன? கற்பனை என்பது ஒரு அத்தியாவசியமான விடயம். எனவே திரைப்படங்களில் கற்பனை என்பது தேவை என இக்கால இளைஞர்கள் கருதிக்கொண்டிருப்பது புரிகிறது, இங்கு மசாலாத் திரைப்படத்தில் உள்ள பிரச்சினை என்ன நிஜத்தையும், கற்பனையையும் கலந்து அவற்றை பிரிக்க முடியாத தன்மையை தருவதே ஆகும். நிஜமான கதாப்பாத்திரங்கள், கதாநாயக்கள், கற்பனையான சண்டைக் காட்சிகளையும், சாகசங்களையும் செய்வதேயாகும். சாதாரணமாக நம்மைப் போலவே உண்டு, உறங்கி, வேலைசெய்துவரும் நாயகன் சண்டைக்கென பயிற்சி பெற்று, உடல் வளர்த்து இருபத்து நான்கு மணிநேரமும் அந்நினைவிலேயே வாழும் வில்லனை சட்டென ஓரிரு நொடிகளில் தாக்கி அழிக்கிறான்.




இந்தவிடயங்கள் நம்மால் ஜீரணிக்க முடியாமையே மசாலாத் திரைப்படம் எனும் சொல்லுக்கு நம் மனதுக்குள்ளேயே அருவருப்பு உருவாக காரணமாய் அமைகிறது, ஆயினும் இன்றைய இளைஞர்கள், இவ்வாறான காட்சிகளில் தம்மை மறந்து லயித்து விடுகின்றனர். இதனால் இவர்கள் தரம் குறைந்த ரசிகர்களாகிவிடுகின்றனர். இவ்வாறான இளைஞர்கள் கதாநாயகர்களை தமது உதாரண புருசர்களாகவும், சிலர் கடவுள் ஸ்தானத்திலும் வைத்திருக்கின்றனர்.

இதற்கு காரணம் என்னவெனில் ஆராய்ந்தால், சாதாரண மட்டத்தில் உள்ள இளைஞர்கள் இவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் ஆயிரம். அவ்வாறான பிரச்சினைகளுடன் வாழும் கதாநாயகன் அவற்றிலிருந்து மீளும் போது தாங்களும் மீண்டதாக அவர்கள் மனதளவில் எண்ணுகிறார்கள். அந்த எண்ணம்

அவர்களுக்கு மனமகிழ்வைத் தருகின்றன. எனவே அவற்றை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு செய்ய விளைகின்றனர்.

இவ்வாறான வர்த்தக சினிமாக்களில் வெற்றிக்கு படித்த இளைஞரும் சரி, படிக்காதோரும் சரி மாபெரும் என்னும் சொல்லுக்கு உரித்தாகின்றனர். இவர்கள் சினிமாவிற்குச் செல்லும்போது அதிலிருக்கும் செய்தியை எதிர்பார்ப்பதில்லை. மூன்று மணிநேர பொழுது போக்கே அவர்கள் நோக்கமாக உள்ளது. அத்திரைப்படக் காட்சியமைப்புக்கள் சுவாரஸ்யமாகவும், நகைச்சுவையாகவும், விறுவிறுப்பாகவும் அமையுமிடத்து அதை வெற்றி பெறச் செய்கின்றனர்.

இங்கு திரைப்படங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை நாம் கருத்தில் கொள்ளல் அவசியமாகிறது, படித்தவர்கள் கற்பனையையும், நிஜத்தையும் பகுத்துப் பார்க்கும் அறிவைக் கொண்டுள்ளனர் எனும் கருத்து நிலவுகின்ற போதும், பிரச்சினைகளை அதிகம் எதிர்நோக்குபவர்கள் இளைஞர்களாகவே இருக்கின்றனர். இதனால் கற்பனையைக் கூட நிஜமாக எண்ண விளைகின்ற போது, ஒரு நாள் இவர்களையும்மீறி இந்த வன்முறைகளும், ஆபாசங்களும் வெளிப் படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்றைய சமூகமான இந்த இளைஞர் களிடம் இவ்வாறான எண்ணப்பிறழ்வுகளை இல்லாது மாற்றுவது முக்கிய கடப்பாடாக இருக்கின்றது.

**03. வர்த்தக சினிமாக்களில் இளைஞர்கள்.**

வர்த்தக சினிமா அல்லது மசாலா சினிமா என்கின்ற விடயத்திற்குள் இளைஞர்கள் எவ்வாறு உள்வாங்கப்படுகிறார்கள்? எனப் பார்த்தால் சினிமா இயக்குனர்கள் முதல் தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர், நடிகைகள் வரையும் எழுபது வீதத்திற்கு மேல் இளைஞர்களாகவே இருக்கின்றனர். இது இந்தியாவின் நிலமை இவர்களது நோக்கமே வருமானமாக இருக்கின்ற படியால், வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே சினிமாத் தயாரிப்புக்களில் ஈடுபட விளைகின்றனர். ஆக மொத்தத்தில் ஒரு சினிமா வெற்றிபெற அல்லது வசூலை அதிகரிக்க எந்த வகையான விடயங்களை இணைத்துக் கொள்ள வேண்டுமோ, அவைகள் அனைத்தும் மசால சினிமாவிற்குள்தான் வட்டமிடுகிறது. சினிமா விநியோகஸ்தர்கள் ஒரு திரைப்படத்தை வாங்குவதற்கு முன்னர் மசாலா விடயங்கள் எந்தளவிற்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்கின்றது. இன்றைய கால கட்டங்களில் சினிமாவை அதிகளவு பார்ப்பவர்கள் யார்? அவர்களுக்கு பிடிக்கக் கூடிய விடயங்கள் எவை? என்பதையெல்லாம் நாடி பிடித்து அறிந்து கொண்டுதான் சினிமாத் தயாரிப்புக்கள் நடைபெறுகின்றது.

சினிமா பார்க்கும் வர்க்கத்தினரை எடுத்து நோக்குவோமானால் 60 வீதத்திற்கும் மேலானவர்கள் இளைஞர்களாகவே மாறியுள்ளனர். வருடக் கொண்டாட்டங்கள் விடுமுறைக்காலங்கள் போன்றவற்றிலே இளைஞர்களின் பொழுது போக்கு விடயத்தில் முக்கிய இடம் பெறுவது சினிமா. இன்றைய காதலர்கள் கூட கடற்கரை, கோயில் போன்றவற்றிற்கு செல்வதை விடுத்து சினிமாவிற்குச் செல்கிறார்கள்.

எனவே சினிமா தயாரிக்கப்படுவது அதிகளவு இளைஞர்களுக்காகவே இருக்கிறது, அது போல் தயாரிப்பு பணிகளிலும் அதிகளவு இளைஞர்கள் இருக்கின்றனர். ஒட்டுமொத்தத்தில் வர்த்தக சினிமாக்களில் இளைஞர்களின் ஆதிக்கம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.

ஒரு சிறுவனின் வாக்கு மூலம்

# சிறுவர் உலகிற்கு அன்புக் கரங்கள்

அ. வரப்பிரசாத் - ஹரிஇல்லம்



சிறுவர்களே நாளைய சமுதாயத்தின் தலைவர்கள் என்கிறார்கள் ஆனால் சிறுவர்களையோ துன்புறுத்துகின்றார்கள். அடிமைகள் ஆக்கி வைத்திருக்கின்றார்கள். சிலர் அன்பான கரங்களை கயிற்றினால் கட்டுவது போல் பிஞ்சு உள்ளங்களை வேலைக்கமர்த்துகின்றார்க்ள. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துகின்றாக்ள். இதற்கெல்லாம் காரணம் என்ன? எதனால் இவை நடக்கின்றன?

என நாம் பார்க்கும் போது இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாக வறுமையைக் கூறமுடியும். இவ்வறுமையின் காரணமாகவே சிறுவர்களை வேலைக்கமர்த்துகின்றார்கள். பொதுவாக எடுத்துக் கொண்டால், சில பெற்றோர்கள் சிறுவர்களை வீட்டுவேலைக்கோ அல்லது கூலி வேலைக்கோ அனுப்புகிறார்கள். காரணம் வறுமையின் காரணமாக ஒருவேளை உணவு கிடைத்தால் போதும் என்ற நிலைமையே காணப்படுகின்றது. இது மிகவும் பிழையான விடையமாகும் எப்படியும் சிறுவர்களை படிக்கவைப்பது பெற்றோரது கடமையாகும்.

இதனால் சிறுவர்களின் மனம் உளரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது இதற்கு உதாரணமாக அண்மையில் வெளிவந்த "கிச்சான்" எனும் திரைப்படம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அத்திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்கும் "கிச்சான்" எனும் சிறுவன் பெரும் வறுமை காரணமாக

வேலைக்கமர்த்தப் படுகிறான். இதனால் அவன் பெரும் உள ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றான் இத்திரைப்படம் சிறுவர்களின் உளரீதியான பாதிப்புக்களுக்குச் சிறந்த உதாரணமாகும்.

இதேபோன்று சிலர் வெளித் தோற்றத்திற்காகக் கோஷம்போடுகிறர்கள். சிறுவர்களுக்கு பல உதவிகள் செய்வதாகக்ச் சில வேளைகளில் கூறுகின்றார்கள். பொதுவாக எடுத்துக் கொண்டால் "சிறுவர்களே நாளைய தலைவர்கள்" அல்லது "சிறுவர்களை துன்புறுத்த வேண்டாம்" என்றும் இவ்வாறு வெளித் தோற்றத்திற்காக கோஷம் போடுகிறார்கள். ஆனால் அவர்களை வாயால் மட்டும்தான் சொல்கின்றார்கள் செயலில் செய்து காட்டுகிறார்கள் அல்லர்.

இவ்வாறு இவர்கள் வெளித்தோற்றத்திற்கு கோசம் போட்டு அவர்களுடைய நேரத்தையும், மற்றவர்களுடைய நேரத்தையும், சக்தியையும் வீணாகச் செலவு செய்கின்றார்கள். இதைவிட இவர்கள் இவ்வாறு கோசம் போடாமலே இருந்து விடலாம்.

இவ்வாறு கோசம் போடுவதை விட மிகச் சிறந்த முறையில் சிறுவர்களின் துன்பங்களை சில அரசாங்க நிறுவனங்களும் சில அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களும் போக்கி வருகின்றன இது அனைவராலும் வரவேற்கப்படவேண்டிய ஒரு வரப்பிரசாதமாகும். அடுத்ததாக எடுத்துக் கொண்டால் சிறுவர்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதலாகும். இதனால் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை



பாதிப்படைகின்றது இதனை தடுக்க பாலியல் வல்லுறவுக்கு எதிராகச் செயற்பட அனைத்து மனிதர்களும் செயற்பட வேண்டும். இதுவே பாலியல் வல்லுறவை எதிர்க்கும் ஆயுதமாகும்.

இவ்வாறு நிறுவனங்கள் சிறுவர்களுக்க பல நன்மைகளை செய்வது போல சில சிறுவர் இல்லங்களும் சிறுவர்களுக்கு நன்மை செய்கின்றன. கஷ்டப்படும் சிறுவர்களுக்கு உடை, உணவு, உறையும் ஆகிய முக்கிய மூன்று தேவைகளையும் ஏனைய இன்னும்பல தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. இது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

எனவே சூரியன் போன்று இவ் உலகத்திற்கு முக்கியமாகத் தேவையானவர்களாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் அன்புக் கரங்களை துன்புறுத்த வேண்டாம், வேலைக்கமர்த்த வேண்டாம், இன்னும் பல துன்பங்களுக்கு உட்படுத்த வேண்டாம்.

இவ்வாறு சிறுவர்களை இன்னல்களுக்கு உட்படுத்துபவர்களை சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் ஒன்றிணைந்து ஒழித்து சிறுவர்களை நன்றாகப் படிக்கவைக்க வேண்டும் என எனது கருத்தை கூறுகின்றேன்.

# தொழில்கள் தேடிவருதற்கு தொழில் நாடிகள் வளர்க்க வேண்டிய தொழில் திறன்கள்.

ஜீ. ஸ்ரீநேசன்

இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பல்வேறுவகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றன. அவ்வாறான பிரச்சினைகளில் ஒன்றாக அமைவது இளைஞர்கள், யுவதிகள் தொழில் வாய்ப்புகளின்றி, தொழில் தேடி அலையும் நிர்க்கதி நிலையாகும். அதேவேளை அரச நிறுவனங்கள் (Government Organization) அரசசார்பற்ற நிறுவனங்கள் (Non Government Organization) தனியார்துறை நிறுவனங்கள் (Private Organization) என்பன பலவகையான தொழில்களை வழங்கி வருகின்றன. இருந்தாலும் அலையும் தொழில் நாடிகள் அனைவருக்குமான தொழில்களை மேற்படி நிறுவனங்களால் வழங்க முடியாத பரிதாபகரமான நிலைமையைக் காணமுடிகின்றது.

தொழில் நாடிகளைப் பொறுத்தவரை அவர்களின் கல்வித்தகைமையானது க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம், பட்டதாரிகள், பட்டப்பின் பட்டத்தில் தேறியவர்கள், க.பொ.த. சாதாரண தரத்திற்குக் கீழானவர்கள் என்றவகையில் காணப்படுகின்றன. அதேவேளை பல நிறுவனங்களில் தொழில் வெற்றிடங்கள் (Job Vacancy) காணப்பட்ட போதிலும், அத்தொழில்களைப் பெறக்கூடிய திறன்கள் (Skills) தொழில்நாடிகளிடம் போதியளவு இருப்பதில்லை. அதாவது தொழில்கள்



இருந்தும் அவற்றை ஆற்றுவதற்கு வேண்டிய திறன்களைத் தொழில்நாடிகள் பெற்றிருக்கவில்லை என்பது ஆய்வுகளில் இருந்து புலனாகின்றது.

தொழில் நாடிகள் பல பரீட்சைகளுக்குத் தோற்றியும், பல படிகள் ஏறியும் தோற்றுப்போன நிலையில் உள்ளனர். அவ்வாறானவர்கள் விரக்தியின் விளிம்பில் வேதனையின் வடிவங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கல்வித்தகைமை என்பதற்கு அப்பால், தொழில் நாடிகளிடம் பல்வகைத்திறன்கள் (Multy Skills) இருக்க வேண்டுமென தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. குறிப்பாக கவர்ச்சிகரமான உயர் வேதனங்களைத்தரவல்ல அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள் தொழில் நாடிகளிடம் இருந்து

குறித்த சில திறன்களை எதிர்பார்க்கின்றன. அவ்வாறான திறன்களைப் பின்வருமாறு பட்டியலிட முடியும்.


ஆங்கில மொழியில் தேர்சசி
தகவல்தொழில் நுபத்துறையில் தேர்ச்சி
சிறந்த தொடர்பாடல் திறன்
தலைம தாங்கும் திறன்
குழுவாகம் பணியாற்றவல்ல திறன்
பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் திறன்
பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் திறன்
பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்
புத்தாக்க சிந்தனைத் திறன்
புதிய கருத்துக்களை ஏற்குந்திறன்
சமயோசிதமாகப் பணியாற்றுந்திறன்

மேற்படி திறன்களைச் சற்று ஆழமாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

உலக மொழியாக, உலக மயமாதலுக்குரிய தொர்பு மொழியாக ஆங்கிலமொழியினைக் குறிப்பிட முடியும். அம்மொழியின் ஊடகப் பணியாற்றவல்ல பல தொழில்கள், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகமாக்க காணப்படுகின்றன. ஆனால், தாய்மொழியிற் கற்றுத்தேறும் பலர், ஆங்கில மொழியை அறியாமல், புரியாமல் தேசியமொழிக்கற்பு இழக்காத பதிவிரதைகள் போன்று வாழுகின்றனர். பட்டங்கள் பலவற்றை பெயரின் பக்கவாட்டில் அடுக்கிக் கொண்டவர்கள் கூட உலகமொழி அறிவில்லாமல் பல வாய்ப்புகளை இழந்து முக்காடுகளுக்குள் முனகிக்கொண்டிருக் கின்றனர். "If a man doesn't have even little knowledge in English will be as a frog in a well" என்ற கருத்து ஆராய வேண்டிய தொன்றாகும். அதாவது ஒரு மனிதன் ஆங்கிலத்தில் சிறிதளவும் அறிவு இல்லாமல் இருந்தால் அவன் கிணற்றுத்தவளைக்கு ஒப்பானவன். இவ்வாறு அந்த ஆங்கிலக் கருத்து அர்த்தம் புகட்டுகின்றது. அந்தவகையில் பார்க்கின்றபோது ஆங்கில மொழித்திறனானது பரந்தளவில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான ஊடகமாக உள்ளதென்பது பட்டவர்த்தனமான உண்மையாகும். கவர்ச்சியான சம்பளங்களை அளிக்கவல்ல பல நிறுவனங்கள் பட்டப்படிப்புகள் பலவற்றினைவிட, ஆங்கில மொழித் தேர்ச்சினையே அதிகமாக எதிர்பார்க் கின்றன. க.பொ.த. சாதாரண தரத்தில் கற்ற பலர் ஆங்கில மொழித்தேர்ச்சியினை வைத்துக் கொண்டு கைநிறைந்த சம்பளத்தினையும் பெற்றுக் கொண்டிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

"ஆங்கிலம் அறிந்தால் ஓங்குவாய் தொழிலில் அன்றேல் ஏங்குவாய் என்றும்"

> **தொழில் நாடிகள் பல பரீட்சைகளுக்குத் தோற்றியும், பல படிகள் ஏறியும் தோற்றுப்போன நிலையில் உள்ளனர். அவ்வாறானவர்கள் விரக்தியின் விளிம்பில் வேதனையின் வடிவங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கல்வித்தகைமை என்பதற்கு அப்பால், தொழில் நாடிகளிடம் பல்வகைத்திறன்கள் (Multy Skills) இருக்க வேண்டுமென தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க் கின்றன.**



என்பது இன்றைய யதார்த்தம் ஆகும். தொழிலுலகில் அகலக்கால் பதிப்பதற்கு ஆங்கிலம் அவசியம் என்பதை இன்றைய இளம் சமுதாயம் அறிந்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளது.

தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கான மேலுமொரு திறனாக அமைவது தகவல் தொழில் நுட்பத்தேர்ச்சியாகும். இன்றுநாம் விவசாய யுகம், கைத்தொழல் யுகத்தினைக் கடந்து தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது. இன்று சகலதுறைகளிலும் கணனியின் கைவரிசை காத்திரமாக்க காட்டப்பட்டு வருகின்றது. கணனி, இணையம் (Internet) என்பன கடல்கடந்த பல்வேறு தகவல்களை கைவிரல்களுக்குள் தந்து உதவுகின்றன. அப்படியான சாதனத்தினைக் கையாளத் தெரியாதவன், காலாவதியாகிய அறிவைக் கொண்டவன் எனப்பரிகசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது கணனி அறியாதவன் காலத்திற்கு ஒவ்வாதவன் என்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலை தகவல் தொழில் நுட்பத்தின் உந்துவாயான கணனித்திறனை நாம் அறிந்திருந்தால், பலதுறைகளில் பலவகையான தொழில்வாய்ப்புகளை இலகுவாகப் பெறமுடியும் என்பது இன்றைய உண்மையாகும்.

கி.மு. காலத்தில் வாழ்ந்த கிரேக்க அறிஞர் பிளேட்டோ (Plato) தான் அமைத்த உயர் படிப்பகத்தின் (Accademy) முகப்பில் "தேத்திர கணிதம் அறியாதவன் இங்குநுழையாதிருப்பானாக" என்ற கண்டிப்பான உத்தரவினைப் பொறித்திருந்தார். ஆனால், இனறைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் "கணனித்திறன் அறியாதவன் காலடி வைக்காதிருப்பானாக" என்ற உத்தரவினைப் பொறிக்கும் நிலையில் தொழில் நிறுவனங்கள் மாற்றம் பெற்று வருகின்றன. எனவே கணனி அறிவு கட்டாய அறிவு என்பதை இளந்தலைமுறை அறிந்து தெளிவு வேண்டும்.

தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் மேலுமொரு விடயம் சிறந்த தொடர்பாடல் திறனாகும். இனிமையாக, தெளிவாக, கவர்ச்சியாக, காத்திரமாக, சமயோசிதமாக, பொறுமையாக, விளக்கமாக பிறருடன் பேசக்கூடிய, தொடர்புகளைப் போணக்கூடிய திறன்களையும் தொழில் நிறுவனங்ள் தொழில் நாடிகளிடம் இருந்து எதிர்பார்க்கின்றன. "நலலபேச்சாளனின் நாவசைந்தால் நாடசையும்" என்பது அர்த்துள்ள கூற்றாகும் அந்த வகையில் காப்புறுதி நிறவன பிரதிநிதிகள், விற்பனைப்

"தொழில் நிறுவனங்கள் தொழில் நாடிகளிடம் இருந்து எதிர்பார்க்கும் மேலுமொரு விடயம் தலைமை தாங்கும் திறனாகும். அந்தவகையில், பணியாட்கள் மத்தியிலும் பயனாளிகள் மத்தியிலும் தானாக முன்வந்து தலைமையேற்று பொறுப்புகளை பொறுப்புணர்வுடன் கையாளுந்திறன் உள்ளனவா? என்பதையும் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. கூச்ச சுபாவங்கள் இன்றி சகலருடனும் சரளமாகப் பேசி உத்திகள், உபாயங்களைக் கையாண்டு பணியாட்களிடம் இருந்து பணிகளை வினைதிறன்களுடன் பெற்றுக் கொள்வதற்கு தலைமை தாங்கும் திறன் அவசியமானதாக எதிர்பார்க்கப்படு கின்றது."


பிரதிநிதிகள் மேலும், வர்த்தகத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பாடல் மூலமாக சாதகமான பயன்களை அடைந்து வருமானத்தைப் பெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. நாவன்மை மூலமாக அவர்கள் நல்ல வேதனத்தை உழைப்பதற்கு தொடர்பாடல் திறன் அவசியமானதாக உணரப்பட்டுள்ளது.

தொழில் நிறுவனங்கள் தொழில் நாடிகளிடம் இருந்து எதிர்பார்க்கும் மேலுமொரு விடயம் தலைமை தாங்கும் திறனாகும். அந்தவகையில், பணியாட்கள் மத்தியிலும் பயனாளிகள் மத்தியிலும் தானாக முன்வந்து தலைமையேற்று பொறுப்புகளை பொறுப்புணர்வுடன் கையாளுந்திறன் உள்ளனவா? என்பதையும் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. கூச்ச சுபாவங்கள் இன்றி சகலருடனும் சரளமாகப் பேசி உத்திகள், உபாயங்களைக் கையாண்டு பணியாட்களிடம் இருந்து பணிகளை வினைதிறன்களுடன் பெற்றுக் கொள்வதற்கு தலைமை தாங்கும் திறன் அவசியமானதாக எதிர்பார்க்கப்படுகின்றது. தலைமைகள் நிறுவனத்தின் நிலைமைகளை உயர்த்தும் ஏணிகள், என்ற எதிர்பார்ப்புகள் உண்டு. பழையன கழியப் புதியன புகுதல் என்பதற்கு ஒப்ப புதிய புதிய தலைமைகள் தோன்றுவதற்கு இத்திறன் அவசியமான தாகும்.

தொழில் நிறவனங்களில் அந்நியமாகிப் போகாமல் குழுவாக இணைந்து பணியாற்றக் கூடிய திறன்களையும் தொழில் வழங்குனர்கள் எதிர்பார்க்கின்றனர். அதாவது முரண்பாட்டுச் சுபாவம் அற்ற உடன்பாட்டுச் சுபாவம் உடையவர்களையே எதிர்பார்க்கின்றனர். எனவே குழுத்திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

சவால்களைக் கண்டு பயந்துவிடாமல், முகம் கொடுத்துப் பிரச்சினைகளுக்குத் தாமாகவே தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான திறன்களை தொழில்நாடிகள் கொண்டிருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்படியானவர்களைப் பணியாளர்களாக அமர்த்திக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை தொழில் வழங்குனர்களிடம் உள்ளது.

பழைமையான மரபுவாதக்கருத்துகளில் ஊறிக்கிடக்காமல் புத்தாக்க சிந்தனைகளைப் பிறம்பிக்கக்கூடிய மனப்பாங்குகள் திறன்களையும் தொழில் நாடிகள் கெண்டிருக்க வேண்டும். மேலும் புதிய கருத்துக்களை ஏற்க்கும் திறன்களையும் தொழில் நாடிகள் பெற்றிருக்க வேண்டும்.




இவற்றையெல்லாம் விட நிலைமைக்கு ஏற்ப சமயோசிதமாகச் சிந்தித்துப் பேச்கூடியவர்களாகவும், செயல்படக் கூடியவர்களாகவும் தொழில்நாடிகள் இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது ஆங்கில மொழித்தேர்ச்சி, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி, தொடர்பாடல்திறன், தலைமைதாங்குத்திறன். குழச் செயல் பாட்டுத்திறன், பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் காணுந்திறன், புத்தாக்கத்திறன், சமயோசிதமான செயல்திறன் போன்றனவற்றை தொழில்நாடிகள் கொண்டிருந்தால், நிறுவனச் செயற்பாடுகள் வெற்றிகரமாக அமைய வாய்ப்புண்டு. எனவே வெறுமனே கல்வித்தகைமைகளை மட்டும் காட்சிப்படுத்திக் கொள்ளாமல், மேற்படி தொழிற்றிறன்களையும் தொழில்நாடிகள் வளர்த்துக் கொண்டால் தொழில்வாய்ப்புகளையும் பெறுவது சுலபமாகிவிடும். மேலும் பட்டதாரிகளைப் பொறுத்தமட்டில் மேற்படி தகைமைகளுடன் பல்வினத்தவர்கள் மத்தியில் குழுவாகப் பணியாற்றுதல், நேரத்தினைத் திட்டமிட்டுப் பயன்படுத்தல், தெரியாதவற்றை ஏனையோரிடம் இருந்து கற்றுக் கொள்ளுதல், பொது அறிவு பண்பான பழவழக்கங்கள் பேச்சுகள் போன்ற திறன்களையும் போதியளவு வளர்த்துக் கொள்வதன் மூலமாக, தொழில்களைத் தேடாமல் தொழில்கள் நாடிவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். "கரும்பு கட்டுடன் இருந்தால் எறும்பு தானாக வருமென்ற" பழமொழிக்கு ஒப்ப, தொழிற்றின்கள் தொழில்நாடிகளிடம் இருந்தால் தொழில்கள் அவர்களைத் தேடிவரும் என்பது ஏற்கக்கூடிய ஒரு உண்மையாகும். எனவே தொழிற்றிறன் களைப் பெற்றுத் தொழில்களைப் பெறுவதற்கு தொழில்நாடிகள் திடசங்கற்பம் எடுத்தாக வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

## வாழும்போதே வாழ்த்துவோம்

## கலைஞர்கள் கௌரவம்



பெயர் : காசுபதி நடராஜா

முகவரி : கல்லடி வேலூர், மட்டக்களப்பு

பிறந்த திகதி: 10.04.1941

துறை : பொதுப்பணி

பணிகள் : கடந்த இரு தசாப்தங்களாக 80க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களில், ஆலோசகராகவும் உறுப்பினராகவும் இருந்து பல நூல்கள், விழாக்கள், வெளியீடுகள், ஞாபகார்த்த நிகழ்வுகள் என்பன எழுச்சிபெறுவதற்கு காரணகர்த்தவாக இருந்து வலுவூட்டி உழைத்தவர்.

வெளியீடுகள்: நினைவு மலர்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றின் 100க்கு மேற்பட்ட வெளியீடுகளை மேற்கொண்ட இவர் கதிரொளி, உள்ளூராட்சித் திணைக்கள வெளியீடு, மட்டக்களப்பு சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலர்கள், சூழல் சுடர் (மன்று - சஞ்சிகை) விடிவானம், கதிரொளி, விழுதுகள், ஜீவநீர், யுகசங்கமம் போன்றவை வெளிவருவதற்குக் காரணமாக இருந்தவர்.

சமூகஊடாட்டம்:

- ❖ கிழக்குப் பல்கலைக்கழகம் - சுவாமி விபுலாந்த அழகியற் கற்கை நிலையக் கல்விக் குழு ஆலோசகர்.
- ❖ மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவைத் தலைவர்
- ❖ மட்டக்களப்பு புற்றுநோய் தடுப்புச்சங்க ஆயுட்கால உறுப்பினர்
- ❖ விழுது - ஆற்றல் மேம்பாட்டு மையப் பணிப்பாளர்
- ❖ அகவிழி - ஆசிரியர் பீட ஆலோசகர்
- ❖ மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள நல்லாட்சி வள நிலைய ஆலோசகர்.

பெற்றுள்ள கௌரவம்:

மட்டக்களப்பு கலை இலக்கிய வட்டம், மட்/ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, அமுதம் சஞ்சிகை ஆகியவை பாராட்டி, பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.



பெயர் : கந்தப்பர் கணேசானந்தம்
முகவரி : "துவாரகை" 186, நொச்சிமுனை, மட்டக்களப்பு
பிறந்த திகதி: 15.08.1940
துறை : நாடகம்

நாடக ஊடாட்டம்:

1955ம் ஆண்டு முதல் இன்று வரை பத்து சரித்திர நாடகமும், ஏழு வரலாற்று நாடகமும், இரண்டு சமூக நாடகமும் நடித்துள்ளார். 1969ம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தினர் நடாத்திய நாடக மன்றங்களுக்கிடையிலான நாடகப்போட்டியில் இவர் நடித்த "ஆரையூர் இளவளின்" "சிங்களத்துச் சிங்காரி" என்ற வரலாற்று நாடகம் முதலாவது இடத்தைப் பெற்றது. இது தவிர இவர் நடித்த சிங்கமலைவேந்தன், மானம் காத்த மாவீரன், துரோணர் சபதம், தர்மம் காத்த தலைவன், நிலவறையிலே, நீறுபூத்தநெருப்பு, வெற்றித்திருமகன் என்பன மக்களினதும் பத்திரிகையினதும் பாராட்டைப்பெற்றன.

கலைப்பணி:

இளங்கதிர் நாடக மன்றத்தின் செயலாளராகவும், வளர்மதி இலக்கிய மன்றத்தின் தலைவராகவும், மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையில் 1993ம் ஆண்டு முதல் ஓர் உறுப்பினராகவும் கலைப்பணியாற்றியுள்ளார்.

பொதுப்பணி:

அகில இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் உபசெயலாளர் நாயகமாகவும், மட்டக்களப்பு மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளராகவும், சிவானந்தா வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சபையின் செயலாளராகவும், பழைய மாணவர் மன்றத்தின் செயலாளராகவும், இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தின் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

|  |  |
|---|---|
| பெயர் : | செல்லத்துரை முத்துலிங்கம் |
| முகவரி : | புதுநகர், மட்டக்களப்பு |
| பிறந்த திகதி: | 25.12.1932 |
| துறை : | நாட்டுக்கூத்து |



ஆடிய கூத்துக்கள்:-

சிறுவயதிலிருந்தே கூத்தில் ஆர்வங்கொண்டு இவர் வாளவீமன் நாடகம் (1944), 14ம் போர், 17ம், 18ம் போர் (1946, 1962) அல்லி அருச்சுனன் (1965) போன்ற கூத்துக்களில் ஆடியுள்ளார்.

பழக்கிய கூத்துக்கள்:-

1. குருசேத்திரன் போர் (1960)
2. குசலவன் (1962)
3. நாரதர்கலகம் (1963)
4. பகதத்தன்போர்
5. 14ம் போர்

போன்றவற்றில் அண்ணாவியராகச் செயற்பட்டுள்ளார்



- சகலருக்கும் எமது நன்றிகள் -

## போட்டி முடிவுகள்:

### பாடசாலை மட்டம் - ஓவியப்போட்டி

*1ம் இடம் : பா. புஸ்பகாந்தன் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை*
*2ம் இடம் : காசிம் முஹம்மது முஸ்அப் - மட்/ புனிதமிக்கேல் தேசிய பாடசாலை*
*3ம் இடம் : க. நிஷாந்தன் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை*

### கிராமிய நடனம்

*1ம் இடம் : மட்/ கருவேப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயம்*
*2ம் இடம் : மட்/ மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயம்*
*3ம் இடம் : மட்/ வின்சன்ற் மகளிர் உ.தே. பாடசாலை*

### விவாதப்போட்டி

*1ம் இடம் : மட்/ புனிதமிக்கேல் தேசிய பாடசாலை*
*2ம் இடம் : மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை*

### திறந்தமட்டப் போட்டி முடிவுகள்

### கவிதை

*1ம் இடம் : புஷ்பராஜா ஷோபா நந்தினி குருஷ்*
*10, இருதயபுரம் மேற்கு, 1ம் குறுக்கு, மட்டக்களப்பு.*

*2ம் இடம் : கலைமகள் கிருஷ்ணமூர்த்தி*
*342, 2ம் குறுக்கு, நாவட்குடா, மட்டக்களப்பு.*

*3ம் இடம் : வேஜினி ஜெஸ்ரின் ஆனந்தம்*
*60, புதுமுகத்துவார வீதி, மட்டக்களப்பு.*

### சிறுகதை


*1ம் இடம் : கலைமகள் கிருஷ்ணமூர்த்தி*
*342, 2ம் குறுக்கு, நாவட்குடா, மட்டக்களப்பு.*

*2ம் இடம் : கிருஷ்ணபிள்ளை சிவபாலன்*
*30, 8ம் ஒழுங்கை, கல்லடி வேலூர், மட்டக்களப்பு.*

*3ம் இடம் : செ. பக்சலா*
*39/11, 2ம் குறுக்கு, பாடசாலை வீதி,*
*மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு.*

முத்தமிழ் விழா - 2007

மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை நடாத்தும்
முத்தமிழ்விழா - 2007



*தலைமை:*
**திருமதி. கலாமதி பத்மராஜா**
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு.

*பிரதம அதிதிகள்:*
**திரு. சு. அருமைநாயகம்**
அரசாங்க அதிபர், மட்டக்களப்பு

**திரு. K. தட்சணாமூர்த்தி**
மாவட்ட நீதிபதி, மட்டக்களப்பு.

*சிறப்பு அதிதிகள்:*
**திரு. K. மகேசன்**
மேலதிக அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு

**திரு. மா. உதயகுமார்**
ஆணையாளர், மட்/மாநகரசபை

**இடம்: மட் / மகாஜனக் கல்லூரி**
**காலம்: 06.11.2007 மாலை 2.30மணி**

## நிகழ்வுகள்:

**ஆரம்பம்: பி.ப. 2.30**

**மங்கல விளக்கேற்றல்**

**தமிழ்மொழி வாழ்த்து**
*மட்/ மகாஜனக் கல்லூரி*

**கலாசார கீதம்**
பிரதேச செயலக ஊழியர்கள், ம.வ

**வரவேற்புரை**
திரு. என். வில்வரெத்தினம்
உதவிப் பிரதேச செயலாளர், ம.வ

**மலர்வெளியீடு**

**வெளியீட்டுரை**
*திரு. த. மலர்ச்செல்வன்*
*கலாசார உத்தியோகத்தர், ம.வ*

**கலைஞர் கௌரவம்**
*திரு. காசுபதி நடராசா - பொதுப்பணி*
*திரு. கா.க. கணேசானந்தம் - நாடகம்*
*திரு. செ. முத்துலிங்கம் - கூத்து*

**கிராமிய நடனம்**
*மட்/ கருவேப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயம்.*

**சிறப்புரை**
*பேராசிரியர். சி. பத்மநாதன்*

**உடுக்கிசைப்பாடல்**
*இருதயபுரம் சமூர்த்திச் சங்கம்*

**சிறப்பு அதிதிகள் உரை**
*திரு. மா. உதயகுமார்*
*ஆணையாளர், மாநகரசபை.*
*திரு. K. மகேசன்*
*மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு*


**சிறுவர் நாடகம்**
*மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்*

**பிரதம அதிதிகள் உரை**
*திரு. K. தட்சணாமூர்த்தி*
*மாவட்ட நீதிபதி, மட்டக்களப்பு*
*திரு. சு. அருமைநாயகம்*
*அரசாங்க அதிபர், மட்டக்களப்பு.*

**விவாத அரங்கு**
*இலத்திரனியல் ஊடகங்கள் சமுதாயத்தைச் சீரழிக்கின்றன.*
*மட்/புனிதமிக்கேல் கல்லூரி , மட்/வின்சன் ம.உ.பாடசாலை*

**நன்றியுரை**
*திருமதி. நிர்மலா ஜெயராஜா*





தேனகம் 2007